[illegible]
V.4 No.9
Sep 1931

TL
R673m211,M28
N31 44.
187158

91

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 4—No. 9.

3-OCT 1931

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௪ | பிரசோற்பத்தி ஆண்டு புரட்டாசித் திங்கள் 1931 ௵ செப்டம்பர்௴ | இதழ் ௯ |
|---|---|---|

உள்ளுறை

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| தென்புலத்தா[illegible]ர் ? ... ... | ... ௨௧௭ |
| முருகன் [illegible]ண்மாண் ... ... | ... ௨௨0 |
| திருஞானசம்பந்தரும், நல்லூர்ப்பெருமணமும் | ... ௨௨௪ |
| சம்பந்தரும் சோதிடமும்—ஓர் வினா? ... | ... ௨௨௬ |
| சம்பந்தரும் சோதிடமும்—விடை ... | ... ௨௨௭ |
| விநாயக சதுர்த்தி ... ... | ... ௨௨௮ |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—திரு. வி. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1-8-0. 1931 வெளி நாட்டுக்கு ரூ. 2-0-0.
தனிப் பிரதி அணா 3.

# தேவாரம்—குறைந்த விலை

சைவசித்தாந்த மகா சமாஜத்தினரால் வெளியிடப்பட்ட அப்பர் தேவாரம், சுந்தரர் தேவாரம் ஆயிரம் பிரதிகள்வரையில் சமாஜக் காரியாலயத்தில் 1931ஆ ஜூலைமீ 26உ ஞாயிற்றுக்கிழமை மாலை பகிரங்க ஏலத்தில் விற்று முதல் செய்யப்பட்டன. ஏலம் முடிந்த வுடன் சமாஜ நிர்வாகசபைக் கூட்டம் ஒன்று நடந்தது. அதில் ஏலத்தில் உயர்ந்தவிலை விகிதம் எவ்வளவிருந்ததோ அதே விகிதப்படி ஏலத்துக்கு வர இயலாத அங்கத்தினருக்குச் சில நாட்கள்வரை பிரதிகளைத் தந்து சௌகரியம் செய்துகொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆகையால் இதுமுதல் ஒருமாதம்வரையில் சமாஜ அங்கத்தினருக்குப் புத்தகங்கள் கீழ்வரும் விவரப்படி அனுப்பப்படும்.

| | |
|---|---|
| சுந்தரர் தேவாரம் 100 ராப்பர் பிரதிகள் | விலை ரூபா 16—0—0 |
| அப்பர் தேவாரம் 100 ராப்பர் பிரதிகள் | விலை ரூபா 40—0—0 |

சுந்தரர் தேவாரம் 100 பிரதிகளைப் பெட்டியில் வைத்து இரயில்வே பார்சல் (To Pay) மூலம் அனுப்பி இரயில்வே இரசீதை வாங்குவோர் தபால் விலாசத்துக்கு ரிஜிஸ்தர் தபால் மூலம் அனுப்புவதற்குப் பிரத்தியேகச் செலவு ரூபாய் ஒன்று ஆகிறது. அவ்வாறே அப்பர் தேவாரம் நூறு பிரதிகளை அனுப்பும் செலவு ரூபாய் இரண்டாகும். எனவே, ஷை பிரதிகளைப் பெற விரும்புவோர் இன்றுமுதல் ஒரு மாதத்துக்குள் முன்பணமாக ரூபா 17 அல்லது ரூபா 42 அனுப்பினால் பணம் கிடைத்த மூன்று நாளைக்குள் அவர்கட்குப் புத்தகங்கள் மேற்கூறியபடி அனுப்பப்படும். மேற்கூறிய தேவாரப் பிரதிகள் இன்னும் சிலவே இருத்தலால் பின்னர் ஏமாற்றமடையாது இப்போதே விரைந்து பெற்றுக்கொள்வதே நலம்.

இங்ஙனம் :

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,<br>
சென்னை. 10—9—1931

ம. பாலசுப்ரஹ்மண்யம்,<br>
காரியதரிசி.

## மதிப்புரைகள்

“சன்மார்க்கன்” :—இது கொங்குமண்டல சமரச சன்மார்க்கசங்கத் திங்கள் வெளியீடு - ஆசிரியர் : சி. சுவாமி சிவகேசம். விலாசம் : பழனி. ஆண்டுச் சந்தா ரூபா ஒன்று. நாடு, மொழி, சமூகம், சமயம் முதலியவற்றின் முன்னேற்றத்துக்காக கல்வி, கைத்தொழில், வாணிபம் விவசாயம் முதலியவற்றின் வளர்ச்சி முறைகளைத் தெரிவிக்கும் கட்டுரைகள் இத்திங்கள் வெளியீட்டில் பிரசுரிக்கப்படுகின்றன. இப்பத்திரிகைக்கு நாம் மனமார்ந்த நல்வரவு கூறுகின்றோம். இது உண்மைச் சன்மார்க்கத்தைப் போதிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

## நம் சமாஜத்தின் இருபத்தாறும் ஆண்டுவிழா

நம் சமாஜத்தின் இருபத்தாறும் ஆண்டு விழாவைத் தனவணிக நாட்டின் ஒரு பகுதியில் நடத்தவேண்டுமென்று மேலைச் சிவபுரி சன்மார்க்க சபைத்தலைவர் - சைவத்திரு - சாமிநாதன் செட்டியார் அழைத்திருப்பதும் அவ்வழைப்பை ஒப்புக்கொண்டு அப்பெரியாரை நம் சமாஜத்தின் வரவேற்புக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுத்திருப்பதும் நம் சமாஜத்து அங்கத்தவர்கள் அனைவரும் அறிந்த விஷயங்களே. விழா நடத்தவேண்டியகாலம், ஊர், விழாத்தலைவர், விழாப் பகுதிகள், நடைமுறை முதலியனபற்றிய தங்கள் கருத்துக்களை அங்கத்தினர்கள் சமாஜக் காரியதரிசிக்கும், மேற்கூறிய வரவேற்புக் காரியதரிசிக்கும் 1931ஆ செப்டம்பர்மீ 30உக்குள் தெரிவிக்கவேண்டும். மேற்கூறியவைகளைத் தீர்மானிப்பதற்காக சமாஜப் பொதுக்கூட்டம் ஒன்று 1931ஆ அக்டோபர்மீ 3உ சனிக்கிழமை மாலை 5-30 மணிக்குச் சமாஜக் காரியாலயத்தில் கூடும். அக்கூட்டத்துக்கு ஒருவேளை போதிய அங்கத்தினர் வாராவிடில் (Want of quorum) அடுத்துவரும் திங்கட்கிழமை (5-10-1931) மாலை 5-30 மணிக்கு அதேயிடத்தில் வந்திருப்பவர்களைக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

இங்ஙனம் :

சைவ சித்தாந்த மகா சமாஜம்,<br>
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,<br>
சென்னை. 10—9—1931

ம. பாலசுப்ரஹ்மண்யம்,<br>
காரியதரிசி.

3 OCT 1931

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்


# சித்தாந்தம்

" ஆனைமுகன் அறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு "

| | | |
|---|---|---|
| மலர் ௪ | பிரசோற்பத்தி ஆண்டு புரட்டாசித் திங்கள் 1931 ஞு செப்டம்பர்மீ | இதழ் ௯ |


## தென்புலத்தார் யார்?

[மறைமலையடிகள்]

சென்ற தைப்பூச நாளன்று பல்லாவரத்தில் நடைபெற்ற பொதுநிலைக்கழக இருபதாம் ஆண்டுவிழாப் பேரவையில் திருவாளர் கி. குப்புசாமி முதலியாரவர்கள் "தென்புலத்தார் தெய்வ" மென்னுந் திருக்குறளிற் போந்த தென்புலத்தா ரென்னுஞ் சொல்லுக்குப் பரிமேலழகியார் உரையைத் தழுவி உரைத்த கொள்கையினை யாம் உடன்படாது, அச்சொல்லுக்கு வேறு பொருள் கூறினேமாக, அதுபற்றி அறிஞர்க்குள் வழக்கு நேர்ந்ததாகலின், யாம் கொண்ட கருத்தினை நன்கு விளக்கிக் காட்டவேண்டுமென அன்பர் பலர் கேட்டுக்கொண்டதற்கிணங்கி, அதனை இங்கே இயன்றமட்டும் விளக்குவான் புகுந்தேம்.

தென்புலத்தாரென்பதற்குப் பரிமேலழகியா ருரைத்த பொருள் இது:

"தென்புலத்தார் பிதிரர்; பிதிரராவார் படைப்புக்காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கு இடம் தென்றிசை யாதலின் தென்புலத்தா ரென்றார்."

இனித், தெற்கே குமரிநாடு இருந்த காலத்து அதன்கண் ஓடிய பஃறுளியாற்றங்கரையை யடுத்த பெருநாட்டில் அரசு செலுத்திய பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி மேலதாக வைத்து நெட்டிமையார் என்னும் நல்லிசைப் புலவர் பாடிய " ஆவுமானியற் பார்ப்பனமாக்களும் " (புறநானூறு, ௯) என்னுஞ் செய்யுளிலும்,

"தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கு
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்" [ம்

என்று தென்புலம் வாழ்நர் குறிக்கப்படுகின்றனர். இச்செய்யுளுக் கெழுதப்பட்ட பழைய உரையில் தென்புலம்

வாழ்நர் என்பதற்குத் "தென்றிசைக்கண் வாழ்வோராகிய நுங்குடியி லிறந்தோர்" என்பது பொருளாக எழுதப்பட்டிருக்கின்றது.

தென்புலத்தார் என்னுஞ் சொல்லுக்குப் பரிமேலழகியார் உரைத்த பொருளும், புறநானூற்று உரைகாரர் உரைத்தபொருளும் ஒன்றோடொன்று ஒவ்வாமல் மாறுபட்டு நிற்றல் மேலே காட்டிய அவ்விருவருரைகளையுமொத்து நோக்குவார்க்கு நன்கு விளங்கும்.

இனி, இவ்விரு வேறு உரையுள் எஃது அச்சொற்பொருள் உண்மையறிவிப்பதென்பது ஆராயற்பாற்று. இந்நிலவுலக மெங்கணுமுள்ள மக்கட்கூட்டத்தாரிற், பண்டுதொட்டு நாகரிகத்திற் சிறந்தார் முதல் அதிற் சிறவாதார் ஈறாக எல்லா வகுப்பினரும் இறந்துபட்ட தத்தம் முன்னோர்களை நினைந்து வழிபாடாற்றி வந்திருக்கின்றனர். தம் முன்னோரை நினைந்து வழிபடாத ஒரு வகுப்பினரை யாண்டுங் காண்டல் இயலாது. எங்குமுள்ள மக்களின் இவ்வியற்கை வழக்கத்துக்கு இசையவே நம் பண்டைத் தமிழ்மக்களுந் தம்மை நாகரிக வாழ்க்கையில் வாழச்செய்த தம் முன்னோரை நினைந்து வழிபாடு செய்துவந்தனர்; இவர் அங்ஙனந் தம் முன்னோரை வழிபட்டு வந்த குறிப்புப் புறநானூற்றுரைகாரர் "தென்றிசைக்கண் வாழ்வோராகிய நுங்குடியில் இறந்தோர்"என்றுரைத்தவுரையால் தெற்றென விளங்கா நிற்கின்றது.

மற்றுப், பரிமேலழகியார் உரைத்த உரையோ தமிழரில் இறந்துபட்ட முன்னோரைக் குறியாதாய்த், 'தென்புலத்தார்' என்பதற்குப் 'பிதுரர்' என்று பொருள்கூறி "அப்பிதுரராவார் படைப்புக்காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி" என்றும், "அவர்க்கிடந் தென்றிசை" என்றும் அவர் வரலாறு விரித்தது. எனவே, பிதுரர் என்பார் தமிழரின் இறந்துபட்ட முன்னோரல்லரென்பதூஉம், அவர் நான்முகனாற் படைப்புக்காலந் தொட்டே படைக்கப்பட்டுத் தென்றிசைக்கண் வாழும் ஒரு கடவுள் வகுப்பினராவ ரென்பதூஉம் பரிமேலழகியார் கருத்தாகின்றன. ஆனால், வடநூல்களிலோ பிதுரரைப்பற்றிய வரலாறு பரிமேலழகியார் கூறியபடி காணப்படவில்லை. அரிவம்ஸத்திலும் வாயுபுராணத்திலும் அவர் வரலாறு இங்ஙனஞ் சொல்லப் படுகின்றது: "தேவர்கள் நான்முகனை வணங்காது இகழவே, அவன் அவர்களைப் பேதையராகும்படி வைதான்; அதுகண்டு அவர் தாஞ் செய்த பிழையைப் பொறுக்கும்படி வேண்ட, அவன் அவர்களை நோக்கி 'நீவிர் நும் புதல்வர்பால் அறிவுபெறக் கடவீர்' என்று ஏவினான். அங்ஙனமே அத் தேவர்கள் தம் புதல்வர்பாற் றவச்சடங்குங் கழுவாய்ச் சடங்குங் கற்றுணர்ந்து, அங்ஙனங் கற்றுணர்ந்தமை நோக்கித் தம் புதல்வர்களையே 'பிதுரர்' என வழங்கினர்; அக் காரணம்பற்றியே தேவர்களின் புதல்வர்கள் முதற் பிதுரராயினர்." ஏனைய புராணங்களும் பிதுரர் வரலாற்றை இவ்வாறே நவல்கின்றன. ஆனால், மனுஸ்மிருதியோ, இரணியகருப்பன் மகன் மனு; அவன் புதல்வர்களான விராஜர், மரீசி, அத்திரி, பிருகு, ஆங்கிரசர், புலத்தியர், வசிட்டர்முதலான ஏழு முனிவர்களின் மக்களே 'பிதுரர்' ஆவரென்றும், இவர்கள் எழுவகைக் கூட்டத்தினராய்ச் சாத்தியர்களுக்கும், அக்நிஷ்வாத்தர்களுக்கும், தைத்தியர் தானவர் இயக்கர் கந்தருவர் நாகர் இராக்கதர் சுபர்ணர் கின்னரர்களுக்கும், பிராமணர்களுக்கும், க்ஷத்திரியர்களுக்கும், வைசியர்களுக்கும், சூத்திரர் களுக்கும் பிதுரராவரென்றும் நவலா நிற்கின்றது (௩, ௧௯௪—௧௯௭). இந்நூல்களிலாதல், ஆபஸ்தம்பர் கௌதமர் வசிட்டர் போதாயனர் இயற்றிய தருமசூத்திரங்களிலாதல், சாங்காயனர் ஆஸ்வலாயனர் பாரஸ்கரர் காதிரர் கோபிலர் இரணியகேசின் ஆபஸ்தம்பர் இயற்றிய கிருகிய சூத்திரங்களிலாதல் மேற்கூறிய 'பிதுரர்' தென்புலத்தில் உள்ளவராகக் குறிப்பிடப்படவில்லை.

இனி, இந்நூல்களுக்கும் வடமொழியில் உள்ள மற்றெந்நூல்களுக்கும் முற்பட்டதாகிய இருக்குவேதமானது எவரைப் பிதுரர் என்று கூறுகின்றதென்பதைச் சிறிது ஆராய்வாம். இருக்குவேதப் பத்தாம் மண்டிலத்தின்கண் உள்ள பதினைந்தாம் பதிகமானது பிதுரர்கள்மேற் பாடப்பட்டிருக்கின்றது. அதனைப் பாடிய பண்டை ஆரியர், இறந்துபோன தம் முன்னோரையே பிதுரர்களாக விளித்துப் பாடியிருக்கின்றனர்; அவர் பாடிய அப் பதிகத்தின் சில பகுதிகளை இங்கே மொழிபெயர்த்துத் தருகின்றேம் :—

"சோமபானத்தில் ஒருகூறு பெறுதற்குத் தக்காரான மூதாதைகள் கீழுள்ள நடுவுள்ள மேலுள்ள உலகங்கட்கு மேலேறுக!, ஆவிவடிவத்தைப் பெற்ற அவர்கள் அமைதியும் அறமுமுடையாராய், யாம் அழைக்குங்கால் வந்து எமக்கு உதவி செய்க! (௧)

முன்னரே இறந்து போனாரும், அவர்க்குப்பின்னர் இறந்து போனோரும், இம்மண்ணுலகத்திற்கு அணித்தாகத் தங்கினோரும், வல்லரான தேவர்களிடையே தங்குவோரும் ஆகிய மூதாதைகளுக்கு இவ்வணக்கத்தைச் செலுத்துவோமாக! (௨)

சோமநறவைப் பெறுதற்குத் தக்காரான, எங்கள் சோமவிருந்திற்குச் சிறப்புடன் வந்தோரான எங்கள் பழைய மூதாதைகளுடன், விழைவுடையாரொடு விழை வுடையனாய்க் களிப்புடையனாய், இயமன் தான்வேண்டியபடி யாமிடும் அவியுணவை அயில்க! (௮)

ஓ! தீக்கடவுளே! ஒளியுலகில் உறைபவராய், முதற் பிறந்தவராய், இறைவனை வழுத்துபவராய், அவியுணவை அயில்பவரும் பருகுபவருமாய், மெய்ம்மையுடையராய்த், தேவர்களோடும் இந்திரனோடும் இயங்குபவராய் உள்ள எம், எண்ணிறந்த பண்டை மூதாதைகளுடன் நீ வருக! (௧௦)

ஓ ஜாதவேதனே, இங்கு வந்தவரும் வாராதவரும், யாம் அறிந்தவரும், அறியாதவரும் ஆன மூதாதைகள் இத்துணைய ரென்பதை, நீ நன்குணர்வை; அவரவர் பங்குக்கென்று நன்கு சமைத்துவைக்கப்பட்ட, இவ் வேள்வியை ஏற்றுக்கொள்க! (௧௩)

தீயில் எரிக்கப்பட்டவரும், எரிக்கப்படாமற் புதைக்கப்பட்டவரும், ஆன அவர்கள் வானுலகின் நடுவில் தாம் பெறும் அவியுணவினாற் களிகூர்கின்றார்கள்; ஓ முதல்வனே! அவர்கட்கு ஆவியுலகத்தையும், அவர்கட்குரிய, ஆவி யுடம்பையும் நின்னுள்ளம் வேண்டியபடியே ஈந்திடுக!" (௧௪)

இங்ஙனம் போந்த பழைய இவ்விருக்குவேதப் பதிகத்தில், ஆரியரின் மூதாதைகளே 'பிதுரர்' ஆதலும்; அவர்கள் தாந்தாஞ் செய்த நல்வினை தீவினைக்கேற்ப இறந்தபின் இம்மண்ணுலகத்திற்கு அணிமையிலும் இதற்குமேல் நடுவணதான வானுலகிலும் அதற்கு மேலுள்ள துறக்கவுலகிலுஞ் சென்று வைகுதலும்; அவர்தம் மூதாதைகள் இறந்த ஞான்று அவர்களுள் ஒரு பகுதியாரை நெருப்பிலிட்டு எரித்தும், மற்றொருபகுதியாரை மண்ணின் கீழிட்டுப் புதைத்தும் வந்தனரென்பது



18758

னால் அப்பிதுரர், பரிமேலழகியார் கூறியபடி "அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி" யாகாமையுந் தெற்றென விளங்கா நிற்கும். ஆரியரின் மூதாதைகளான அப்பிதுரர்கள், இயமன் உலகத்திலும் பகலவன் உலகத்திலுந் திங்கள் உலகத்திலுஞ் சென்று வைகுவரென அவ்விருக்கு வேத ஒன்பதாம் மண்டிலத்தின் ௧௧௩-ஆம் பதிகத்து ௮, ௯, ௧௦-ஆஞ் செய்யுட்கள் மொழிகின்றனவே யன்றி, அவர் தென்புலத்தின்கட் சென்று வைகுவரெனக்கூறுகின்றிலது. மேலும் ஆரியர் தம்மைச்சேர்ந்தார் உயிர் துறக்குங்கால் இயமனை வேண்டிப் பாடிய பதிகத்தில், இறந்து செல்வோன் உயிரைநோக்கி,

"ஓடுக! சாமாவின் குடிகளும், பழுப்பு நிறத்தொடு பலவரிகளை யுடையனவும் நான்கு கண்கள் வாய்ந்தனவும் ஆகிய இரண்டு நாய்களையும் நின் இனிய வழியினிடையே விரைந்து கடந்து செல்க! இயமனுடன் கூடி மகிழ்ந்திருப்பாரான இரக்க நெஞ்சமுள்ள, மூதாதைகள்பால் விரைந்து அணுகுக!"

(இருக்குவேதம் ௧௦, ௧௪, ௧௦)

என்று கூறுதல்கொண்டுந், தம் மூதாதையர் இயமனுலகத்திற்குச் செல்வதாகப் பண்டையாரியர் நம்பிவந்தமை நன்கு புலனாகாநிற்கும். இயமன் தென்புலத்திற்கு உரியவனாகப் பிற்காலத்தெழுந்த வடநூல்கள் நுவலுங்கதை, பண்டை வடநூலாகிய இருக்குவேதத்தில் யாண்டுங் காணப்படாமை கருத்திற்பதிக்கற்பாற்று. அவர் சென்று வைகும் இயமனுலகு, வானநாட்டின் நடுவண் உள்ளதாகவே முன்னர்க்காட்டிய ௧௫-ஆம் பதிகத்தின் ௧௪-ஆஞ் செய்யுள் ஐயமற ஓதுதல் காண்க.

இன்னும் அவ்விருக்குவேதப் பத்தாம் மண்டிலத்தின் ௧௬-ம் பதிகத்து ௩-ஞ் செய்யுளானது இறந்து செல்லும் ஒருவனுயிரை நோக்கிக் கூறுகின்றுழிப்,

"பகலவன் நின்கண்களைப் பெறுக; காற்று நின் உயிர்ப்பைப் பெறுக; நின் வினைப்பயனுக்குத்தக மண்ணுலகத்திற்கோ விண்ணுலகத்திற்கோ நீ செல்க! நின்வினை அங்ஙனமாயின் நீ நீரினுட் செல்க; அல்லது செடிகளினுட் புகுந்து, நின் உறுப்புகள் எல்லாவற்றுடனும் ஆண்டு வைகுக!"

என்றுரைக்குமாற்றால், நல்வினைசெய்த உயிர் விண்ணுலகத்திற் சென்று வாழுமென்பதும்; நல்வினை செய்யாத உயிர் மண்ணுலகத்தை யடுத்துப் பேய்களாக அலைந்து திரிதலே யல்லாமல், நீரினுட்புகுந்து நீரணங்காகவுங் கானகத்துள்ள செடிகளினூடே புகுந்து காட்டணங்காகவும் உறையுமென்பதும் பண்டையாரியர்தம் நம்பிக்கையாதல் நன்கு புலனாகின்றதன்றோ? இங்ஙனமெல்லாம் இறந்து சென்ற உயிர்கள் வைகும் இடங்கள் வான் நடுவணதான இயமனுலகும், ஞாயிறு திங்களுலகும், மண்ணுலகும், மண்ணுக்கும் விண்ணுக்கும் நடுவணதாம் உலகும், நீருங் காடுமேயாம் என இருக்குவேதம் நுவலக் காண்கின்றனமேயன்றி, அது தென்புலம் என நுவலுதலை அதன்கண் யாண்டுங் கண்டிலேம். அது நிற்க.

இனிப், பிதுரரை ஒரு கடவுட்சாதியென்று கூறிய பரிமேலழகியாருரை ஒரு சிறிதும் பொருந்தாமை இருக்குவேத ஆராய்ச்சியால் தெற்றென விளங்குதலும் ஈண்டுக் காட்டுவாம். தேவர்கள் இயங்கும் நெறியையும், இறந்து செல்லும் பிதுரர்கள் இயங்கும் நெறியையும், இருக்கு வேதப் பத்தாம் மண்டிலப் பதினெட்டாம் பதிகத்து முதற் செய்யுளும், இரண்



டாம் பதிகத்து ஏழாஞ் செய்யுளும் முறையே,

"ஓ! மிருத்யுவே, தேவர்கள் வழக்கமாய்ச் செல்லும் நெறியை அகன்று, நினக்குத் தனியேயுரிய நெறியின்கண் இங்கிருந்து புறப்பட்டுச் செல்க!"

என்றும்,

"அங்கியே, பிதுரர்கள் செல்லும்நெறியை நன்கு தெரிந்து கொண்டு, அதன் நெடுகச் சுடர்த்தெரிந்து பேரொளி விளக்கத்தைச் செய்க!"

என்றும் வேறுவேறு கூறுதலை உற்றுநோக்கவல்லார்க்குப், பண்டை ஆரியர்கள் தேவரையும் பிதுரரையும் வேறுவேறாகக் கருதினரே யல்லாமற், பிதுரரையுந் தேவராகக் கருதிற்றிலரென்னும் உண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளங்காநிற்கும். ஆகவே, பண்டையாரியர் இயற்றிய வேத வழக்குக்கு முற்றும் முரணாகப், பிதுரரைத் தேவரென்றுரைப் போர் வேத வழக்கைத் தழுவிய 'வைதிக' ராதல் யாங்ஙனம் என மறுக்க.

இருக்குவேதத்தை எழுத்தெண்ணிப் பயின்றவரும், அதனை முதன்முதல் அச்சிற் பதிப்பித்து, அதன் பதிகங்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துதவியவருமான மாக்ஸ்மூலர் என்னும் ஆசிரியர் (Professor Max Muller), "வேதத்தில் மூதாதையர் அல்லது பிதிரர் தேவர்களுடன் சேர்த்து வழுத்தப்படுகின்றனர்; என்றாலும், அவர்கள் மற்றவருடன் ஒன்றாக வைத்து மயங்கக் கூறப்படவில்லை. தேவர்கள் பிதுரர்களாதல் எஞ்ஞான்றும் இல்லை. மனுவினாலும் யாஞ்ஞியவற்கியராலும் பிதுரர்கள் ஒரோவொருகாற் பண்டைத் தேவ வகுப்பினர் நிலைக்கு உயர்த்தப்பட்டுத் 'தேவ' என்னும் அடைமொழியால் வழங்கப்படினும், பிதுரருந் தேவருந் தனித்தனித் தோற்றமுடைய ரென்பதும், மக்கள் உள்ளமானது தான் வழிபடுதற்கென்று வகுத்துக்கொண்ட இருவேறு நிலைகளைக் குறிப்பவரென்பதும் நாம் எளிதிற் காண்டல் கூடும். இஃது என்றும் மறக்கப்படாத ஒரு பாடமாக இருத்தல்வேண்டும். இருக்குவேத, ௬-ஆம் மண்டிலத்து ௫௨-ஆம் பதிகத்தின் ௪-ஆஞ் செய்யுளில் இங்ஙனங் காண்கின்றோம்.

"மேலெழுகின்ற விடியற்காலம் என்னைக் காப்பதாக! ஓடுகின்றயாறுகள் என்னைக் காப்பனவாக! திண்ணியமலைகள் என்னைக்காக்க! இப்போது தேவர்களை அழைக்கும் பிதுரர்கள் என்னைக் காப்பாராக!"

இச்செய்யுளில், விடியற்காலமும் யாறுகளும் மலைகளுந் தேவர்கள் வணக்கவுரையிற் சேர்த்துச் சொல்லப்படினும் அவற்றின் வேறான இருப்பு உடையராகப் பிதுரர்கள் நுவலப்படுதல் இனிது விளங்குதல் காண்க.

"இதுவேயுமன்றி, மூதாதையருள்ளுந் துவக்கத்திலிருந்தே இருவேறு வகையினர் கருதப்படுதலும் நாம் பகுத்துணர்ந்து கொள்ளல்வேண்டும்; அவருள் ஒரு பகுதியார் நெடுங்காலத்துக்கு முன்னரே இறந்துபோகி அரைவாசி மறக்கப்பட்டவர்களாய்ச், சில குடும்பங்களின் உண்மையில் இல்லாத முன்னோராவர்; அல்லது, வேதநூற் புலவரின் கருத்துப்படி மக்கட்டொகுதி முழுதுமே யாவர்; மற்றொரு பகுதியார் சிறிது காலத்திற்கு முன்னரே இறந்துபோகி, இன்னும் பின்னுள்ளோரால் நினைந்து பணியப்படுவோராவர்.

"மிகப் பழைய மூதாதையர் பொதுவாகத் தேவர்களுக்கு அணுக்கராவர். இறந்

உண்டென்பது எட்டுணையுங் காணப்படவில்லை. அதனால், இறந்த உயிர்கள் தாஞ் செய் ஊழ்வினையால் மீளப் பிறக்கும் என்னும் உண்மையைப் பண்டை நாளில் இருந்த ஆரியர்கள் சிறிதும் உணர்ந்தவரல்லரென்பது நன்கு புலனாகும். ஆகவே, இறந்து இயமனுலகை யடைந்த தம்முன்னோர்கள்எஞ்ஞான்றும் இன்பம் நுகர்ந்தபடியாய் ஆண்டிருப்பரெனவே அவர்கள் நம்பிவந்தார்கள். அவ்வாறுகொண்ட தமது நம்பிக்கைக்கு ஏற்பவே, இறந்து சென்ற தம் பெற்றோர்க்கும் மூதாதையர்க்குஞ், சோமச்சாறு, பால் தேன் சுரா நெய் முதலியவைகளையுந் தாம் உணவாக அருந்திவந்த விலங்கின் இறைச்சிகளையும் படைத்து, நாடோறுஞ் செய்யப்படுவதாகிய 'பிதிர்யஞ்ஞத்தையுந், திங்கடோறுஞ் செய்யப்படுவதாகிய 'பிண்ட பிதிர்யஞ்ஞத்தையும், ஆண்டுதோறுஞ் செய்யப்படுவதாகிய சிரார்த்தத்தையுஞ்செய்து,

"தூய புல்லின்மேல் அமர்ந்திருக்கும் மூதாதையரே, வந்து எமக்கு உதவிசெய்க; இப்படையலை நுங்களுக்காகச் செய்துவைத்தோம்; அவற்றை ஏற்றுக்கொள்க; மிக மங்களமான விருப்பத்துடன் வந்து, சிறிதும் வருத்தமின்றி எங்களுக்கு உடம்பின் நலத்தையுஞ் செல்வத்தையுந் தந்திடுக!"

(இருக்கு, ௧௦, ௧௫, ௪)

என்று அவர்களை வேண்டிக் குறை இரந்து வந்தார்கள்.

இதுவேயுமன்றிப், பழைய ஆரியர்கள் இறந்துபோன தம்மவர்க்குச் செய்து போந்த சவச்சடங்கிற்குந், தமிழ்நாட்டவர் செய்துபோந்த சவச்சடங்கிற்கும் உள்ள மாறுபாடு பெரியதொன்றாய்க் காணப் படுகின்றது. இறந்துபோன தம்மவர் உடம்பை ஆரியர் தீயிலிட்டுக் கொளுத்துதற்கு முன், முதலில் ஒரு வெள்ளாட்டையும் அதன் பின் ஓர் ஆவையும் (பசு மாட்டையுந்) கொன்று, அவற்றின் உடம்பிலிருந்தெடுத்த ஊனையுங் கொழுப்பையும் எலும்பின் மூளையையும் அப்பிணத்தின்மேல் முற்றும் பொதிந்து, அதன்பின் அதனைத் தீயிலிட்டுக் கொளுத்தி வந்தனரென்பது இருக்கு வேத ௧௦-ஆம் மண்டிலத்து ௧௬-ஆம் பதிகத்தில் விளக்கமாகச்சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வாறு செய்வதனால் நெருப்பானது இறந்தவன் உடம்பைச் சுடாதென்று பழைய ஆரியர் நம்பிவந்தனர். இங்ஙனம் பிறவுயிரின் ஊனைப் பொதிந்து தம்மவர் உடம்பை எரித்தால், அவருடம்பை நெருப்புச் சுடாதென்று நம்பின ஆரியர், இறந்து இயமனுலகு சென்ற தம்மவர் எப்போதும் அங்கிருந்தபடியே இன்பம் நுகர்ந்திருப்பரெனவும், அவர் பொருட்டுத் தாம் இங்கே படைக்கும் ஊனும் உணவும் இயமனுலகிலிருக்கும் அவர்கள்பாற் சென்று அவர்கட்கு உண்டியாகப்பயன்படுமெனவும் நம்பி வந்தது வியப்பன்று; ஏனென்றால், "அம்புலியில் ஔவையார் நூல் நூற்கின்றார்" என்றால், அதனை நம்புகின்றவர் கூட்டமும் இங்கு மிகுதியாய் இருக்கின்றதன்றோ?

மற்றுத், தமிழ்மக்களோ, பண்டைக் காலந் தொட்டு "இறந்த வுயிர் மீளப் பிறக்கும்" என்னும் உண்மையைக் கண்டறிந்தவர் ஆவர். முற்பிறவிகளிற் செய்த வினைகள் ஒரு தொகுதியாய் 'ஊழ்' என நின்று பிற்பிறவிகளுக்குக் காரணமாதலை அவர்கள் நன்கறிந்து, அதனைப் "பால்வரை தெய்வம்" என வழங்கி வந்தமை, தமிழர்க்குரிய மிகப்



பழைய நூலாகிய தொல்காப்பியத்தால் தெளியப்படும். * இறந்த வுயிர்கள் தாஞ்செய்து தொகுத்த ஊழ் வினைக்குத் தக மறுபிறவிகளிற் செல்லும் இவ்வுண்மையைக் கண்டறிந்தமையால் பண்டைத் தமிழ்மக்கள் இறந்துபட்ட தம் பெற்றோர்க்கும் பாட்டன் பாட்டியார்க்கும் ஊனும்உடையும் படைத்து அவற்றை ஆரியப் பார்ப்பனர்க்குக் கொடுத்தலாகிய 'சிரார்த்தத்'தைச் சிறிதுஞ் செய்தவரல்லர். இப்பிறவியில் நமக்குத் தாய்தந்தையரா யிருந்தவர் இதனை விடுத்து மறுபிறவியில் வேறு தாய் தந்தையர்க்குப் பிள்ளைகளாய்ப் பிறக்கின்றனரல்லரோ? இது நாலடியாரிற் போந்த,

"எனக்குத் தாயாகியாள் என்னை ஈங்கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள்-தனக்குத்தாய்
ஆகியவளும் அதுவானால் தாய்த்தாய்க் கொண்
டேகும் அளித்திவ் வுலகு"

என்னுஞ் செய்யுளாலும், ஆசிரியர் மெய்கண்டதேவ நாயனார் தாம் அருளிச்செய்த சிவஞானபோதச் செம்பொருணூலிற்,

"கண்ட நனவைக் கனவுணர்விற் றான் மறந்து, விண்படர்ந்தத் தூடு வினையினாற்— கண்செவிகெட், டுள்ளதே தோற்ற உளம் அணுவாய்ச் சென்றமனந், தன்ன விழுங்கரு விற் றான்"

என்றறிவுறுத்திய வாற்றானும் நன்கு தெருட்டப்படுதல் காண்க. இதுவேயுமன்றி, வடநாட்டில் உள்ள இராமகாளியென்னுஞ் சிறு பெண் பிள்ளையும், வேறு சிறார் சிலருஞ் சில பல ஆண்டுகளுக்குமுன் தாம் பிறந்திருந்த பிறவிகளின் வரலாறுகளை நினைவு கூர்ந்து சொல்ல அவ்வரலாறுகள் அத்துணையும் உண்மையா யிருத்தலை அப்பக்கங்களில் உள்ளார் கண்கூடாய் அறிந் திருக்கின்றனர் அல்லரோ? இராமகாளி என்னும் அப்பெண் முற்பிறவியிற்பெற்ற மக்கள், அவளை நோக்கிச்செய்து பார்ப்பனர்க்குக் கொடுத்த ஊனும் உடையும் பிற பண்டங்களும் அவளுக்கு இப்பிறவியில் வந்து பயன்பட்டனவோ? சிறிதும் இல்லையே! அதுபோலவே, இறந்துபட்ட தம் தாய் தந்தையரைநோக்கி நம்மனோர் இப்போது செய்யுஞ் சிரார்த்தமும், அதிற் பார்ப்பனர்க்கு அவர்கள் வழங்கும் பண்டங்களும் வேறு பிறவிகளிற்சென்று பிறந்திருக்கும் அவர்களுக்குச் சிறிதும் பயன்படாவென்பது திண்ணம். இவ்வுண்மை கண்டே வேதநூற் புலமையிற் சிறந்த தயானந்தசரசுவதி சுவாமிகளும் தாம் இயற்றிய சத்தியார்த்தப் பிரகாசிகையின் கண், இறந்துபட்ட தம்மவரை நோக்கி நம்மனோர் சிரார்த்தஞ் செய்து பார்ப்பனர்க்கு உணவுப் பண்டங்களும் பிறவும் வழங்கல் பயனற்றதென வற்புறுத்தி வரைந்திருக்கின்றார். ஊழ்வினையும் அதனாற் பிறவிகள் அடுத்தடுத்து வருதலும் அறியாத பண்டையாரியர், தம் மூதாதையர் எஞ்ஞான்றும் இயமனுலகில் இருப்பரென நம்பினராகலின், அவர் அவ்வறியா நம்பிக்கையால் தம்மூதாதையரை நோக்கிச் சிரார்த்தங் கொடுத்ததது வாவதேயாம். மற்று, நம் பண்டைத் தமிழ்மக்களோ மிகப் பழைய நாளிலேயே ஊழ்வினையின் இயல்பும், அதனால் உயிர்கள் அடுத்தடுத்துப் பிறவிகளிற் சேறலும் நன்காராய்ந்து கண்டவராகலின், அவர்கள் தம் மூதாதையரை நோக்கிச் சிரார்த்தங் கொடுத்திலர். மற்று, அவர் தமது பண்டைத் தமிழகத்திலிருந்து உலகமெங்கணும் நாகரிகத்தைப் பரவச்செய்த தம்முன்

* சொல் ௫௭.

னோர்கள் அனைவரையுமே பொதுவாகத் ‘தென்புலத்தார்’ எனக்கொண்டு அவரை நினைவுகூர்ந்து நன்றிக் கடன் செலுத்தி வந்தனரென்பதே தேற்றமாம். இதுவே தென்புலத்தாரை ஓம்புதலாகுமென்று திருக்குறள் கூறிற்றென்க. அதனாலன்றோ, சிரார்த்தங் கொடுக்கும் முறைகளை வடமொழிக்கண் உள்ள மிருதிநூல்கள் கூறுமாப் போற், பழைய தமிழ்நூல்கள் எவையுஞ் சிறிதுங் கூறாவாயின. ‘சிரார்த்தம்,’ ‘திதி,’ ‘திவசம்’ முதலிய சொற்கள் வடமொழியே யன்றித் தமிழ்மொழி யல்லாமையுந் தமிழர்க்குள் அவ்வினை வழக்கம் இல்லாமையின் அதனைக் குறிக்குந் தமிழ்ச் சொல்லும் இல்லாமையும் யாங் கூறும் இவ்வுண்மைக்கு உறுபெருஞ் சான்றாமென்க.

அற்றேற், பிதுரர்கள் தென்புலத்தில் உள்ளவர்களாகக் கூறும் வழக்கு யாங்ஙனம் வந்தது? எப்போது வந்தது? என்று அறிய விரும்புவார்க்கு, அவ் வரலாற்றினையும் ஈண்டொரு சிறிது விளக்கிக் காட்டுதும். தேவர்கள் உறையுந் துறக்கவுலகம் வடகிழக்கில் உள்ளதெனவும், பிதுரர்கள் உறையும் பிதுரவுலகந் தென்கிழக்கில் உள்ளதெனவுங் கொள்ளும் வழக்கு முதன்முதற் சதபதபிராமணத்திலே தான் காணப்படுகின்றது. *

இச் சதபதபிராமணம் இயற்றப்பட்ட காலத்தில், ஆரியர்கள் பெருந்தொகையினராகத் தென்றமிழ்நாட்டிற் குடிபுகுந்திலரேனுந், தென்றமிழ்நாட்டிலிருந்து வடநாடு சென்று போந்த தமிழ்மக்கள் வாயிலாகவும், வடநாட்டிலிருந்து தென்றமிழ்நாடு புகுந்துதிரும்பிய தமிழ்மக்கள் வாயிலாகவுந் தமிழ்மக்களின் நாகரிக வரலாறுகளை அறிந்துகொண்ட பண்டை அவ்வாரியர்கள், தாம் இயற்றிய இந்நூலின்கண் தமிழர் வணங்கிய முழுமுதற் கடவுளையும், அவர்தம் வழக்கவொழுக்கங்களையுஞ் சிறிது சிறிதாகத் தழுவி யுரைக்கலாயினரென்பது ஆராய்ச்சியாற் புலனாகின்றது. தெற்கிருந்து வடநாடு தொடுத்து இவ்விந்தியநாடு முற்றும் அஞ்ஞான்று தமிழ்மக்களே நிரம்பியிருந்தனரென்பது இஞ்ஞான்றை வரலாற்று நூலாசிரியர் நடுநின்று ஆராய்ந்தெழுதியிருக்கும் நூல்களால் தெற்றென விளங்கா நிற்கும். *

இங்ஙனமாக, ஆரியக்குருமார் மிகப் பழைய நாளிலேயே தமிழர்பாலிருந்தெடுத்துத் தாம் கைக்கொண்டொழுகிய ஒழுகலாறுகள் பலவற்றுள் ‘தென்புலத்தார்’ கடனும் ஒன்றாகும்.

இனி, இச்சதபத பிராமண காலத்திற்கு முற்பட்டவனாகிய ‘பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி’ மேல் நெட்டிமையார் என்னும் நல்லிசைப் புலவர் பாடிய “ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்” என்னுஞ் செய்யுளில், தென்புலத்தார்க்கு நன்றிக் கடன் செலுத்துந் தமிழரின் ஒழுகலாறு நுவலப்பட்டிருத்தலின், இச்சதபத பிராமணம் இயற்றப்படுதற்கு முன்னமே நம் பண்டைத்தமிழ் மக்கள் தெற்கே குமரி நாட்டிலிருந்த தம் மூதாதையரை ஒருங்கே நினைந்து

| * சதபத பிராமணம், | ௯-ஆம் காண்டம் | ௯-ஆம் அத்தி. | ௨-ஆம் பிராமணம், | ௪. |
|---|---|---|---|---|
| ,, | ௧௨- ,, | ௭- ,, | ௩- ,, | ௯. |
| ,, | ௧௩- ,, | ௮- ,, | ௧- ,, | ௫. |

* (ஈண்டு இம்முடிபுக்குரிய பல மேற்கோள்கள் மிக விரிவாக எடுத்து விளக்கப்பட்டுள்ளன. விரிவஞ்சி இவற்றை விடுத்தோம்—பத்திராசிரியர்.)



இறைவனை வழிபட்டு வந்தமை தெற்றென விளங்கா நிற்கும். இங்ஙனந் தெற்கிருந்த தம் மூதாதையர்க்கு நன்றிக்கடன் செலுத்திவந்த தமிழரது ஒழுகலாறு, இருக்கு எசுர் முதலான மிகப் பழைய ஆரிய நூல்களுள் யாண்டும் நுவலப்படாமையின், அக்காலத்து ஆரியர்க்கு அது தெரியாதென்பதூஉம், மற்று அந்நூல்களுக்குப் பிற்பட்டு வந்த சதபத பிராமணத்தில் அவ்வொழுகலாறு நுவலப்பட்டிருத்தலின் அப்பிற்காலத் தாரியர்க்கே அது தெரியலாயிற்றென்பதூஉம் ஐயுறவுக்கிடனின்றி நாட்டப்பட்டமை காண்க.

இனி, ஆசிரியர் இவ்விந்திய நாட்டிற் புகுந்த காலந்தொட்டே, தமக்கு ஊண் கொடுத்து உடை கொடுத்து இருக்க உறையுள் கொடுத்துப் பல வகையால் உதவி யாற்றி வந்த தமிழ் மக்களைத் ‘தஸ்யுக்கள்’, ‘தாசர்கள்,’ ‘இலிங்கத்தை வணங்குபவர்கள்,’ ‘வேள்விச் சடங்கு செய்யாதவர்கள்,’ ‘அசுரர்கள்,’ ‘இராக்கதர்கள்’ என்று இகழ்ந்து வந்தமையோடு, அவர்களைச் சுவடற அழித்துவிட வேண்டுமென்றுந், தாம் வணங்கிய ‘இந்திரன்,’ ‘வருணன்’ முதலான தேவர்களை ஓயாமல்வேண்டி வந்திருக்கின்றார்கள். இக்காலத்துந் தம்மைச் ‘சாமி, சாமி’ என்று பல வகையாற் கொண்டாடித், தமக்கு வேண்டிய உதவிகளை யெல்லாஞ் செய்து வருந் தமிழ் மக்களை, அவ் வினத்தவர் ‘சூத்திரர்’ என்னும் மிக இழிவான சொல்லால் வழங்கி வருதல் எவரும் அறிந்ததன்றோ? இங்ஙனம் பண்டைநாள் தொட்டு இன்று காறும் ஆரியரும் அவர் குழுவிற் சேர்ந்து அவர் வண்ணமாயினாருந் தமிழரை நஞ்சாகப் பகைத்து வரும் வரலாறுகளை **வேளாளர் நாகரிகம், சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்** என்னும் நூல்களில் விரித்து விளக்கிக் காட்டியிருக்கின்றேம். இவ்வாறு தமிழர்பால் ஆரியர்க்கு இயற்கையே யுள்ள நச்சுப் பகைமை, இச்சதபத பிராமண காலத்து ஆரியர் மாட்டுங் காணப்படுகின்றது. இவ் ஆரியர்கள் தாம் தேவரெனவுந், தாம் உறையும் வடதிசைக்கண் மட்டுமே தேவர்கள் உறையுந் துறக்கவுலகம் உண்டெனவுந், தாம் மட்டுமே அத்துறக்கவுலகு செல்லத் தம்மவரல்லாத தமிழர்களாகிய அசுரர்களெல்லாந் தெற்கேயுள்ள கூற்றுவனுலகு செல்வரெனவும் வரைந்திருக்கின்றனர்; அது வருமாறு:—

சதபதபிராமணம், ௧௨-ஆங் காண்டம்
௭-ஆம் அத்தியாயம், ௩-ஆம் பிராமணம், ௭.

“இரண்டு வேதிகள் இருக்கின்றன, ‘தேவருலகம் பிதுரருலகம் என ஈருலகுகள் உண்டு’ என்று அவர்கள் சொல்லுகின்றார்கள். ஒன்று (ஒரு வேதி) வடக்கிலும் மற்றொன்று தெற்கிலும் இருக்கின்றன; ஏன் என்றால், தேவர்களுலகு வடக்கிலும் பிதுரர்களுலகு தெற்கிலும் உள்ளன. வடபால் உள்ளதனால் அவன் தேவருலகைப் பெறுகின்றான்; தென்பால் உள்ளதனால் அவன் பிதுரருலகைப் பெறுகின்றான்.”

௧௩-ஆங் காண்டம், ௮-ஆம் அத்தியாயம்,
௧-ஆம் பிராமணம், ௫.

“தேவர்கள், தமக்கு எதிரிகளும் பகைவருமான அசுரர்களை அவர்களிருந்த இடங்களினின்றுந் துரத்திவிட்டார்கள்; இருக்க இடமில்லாமையால் அவர்கள் வெல்லப்பட்டார்கள். ஆனதனாற்றான், தேவரினத்தைச்

சேர்ந்த மக்கள் தாம்புதைக்கும் இடங்களை நாற்கோண வடிவினதாக அமைக்கின்றனர்; மற்று, அசுர இனத்தைச் சேர்ந்த கீழ்நாட்டவரும் (சூத்திரரும்) பிறருமோ தேவர்களால் தாம் தம் இருப்பிடங்களினின்றுந் துரத்தப்பட்டவர்களாதலால், அவற்றை வட்டவடிவினதாக அமைக்கின்றனர். அவன் அவ்விடத்தைக் கிழக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலே தங்குமாறு அமைத்தான்; ஏனென்றாற், பிதுரர் உலகிற்குச் செலுத்தும் வாயில் மெய்யாகவே அவ்விடத்திலேதான் இருக்கின்றது.''

இவ்வாறிவர்கள் வரைந்திருப்பது கொண்டு, வடபால் உள்ளதுதான் தேவர்கள் உறையுந் துறக்க உலகமாம் என்பதும், தென்பால் உள்ளதுதான் பிதுரர்கள் உறையும் நரக வுலகமாமென்பதும், ஆரியராகிய தாமெல்லாந் துறக்கவுலகு செல்லத் தமிழராகிய பிறரெல்லாந் தெற்கேயுள்ள நரக வுலகே செல்வரென்பதும் இவ்வாரியர்க்குக் கருத்தாதல் நன்கறியப்படும். எனவே, தமிழர்க்கு நரகப்பேறல்லது வேறில்லையென்றும், பிதுரருலகென்பது நரகவுலகே யன்றிப் பிறிதன்றென்றும் இவ்வாரியர் சொண்டமை நினைவில் இருத்திக்கொள்க. இங்ஙனந் தமிழர்மேல் வைத்த நச்சுப் பகைமை காரணமாகவே தெற்கே நாகரிகமுடையராயிருந்து இறந்துபட்ட தமிழர் தம் மூதாதைகளுக்குரிய தென்றிசையை, உயிரைக் கொள்ளை கொள்ளுங் கூற்றுவனுலகாகவும் அவர் தம் பிதுரருறையும் அவ்வுலகை நரகவுலகாகவுஞ் சதபதபிராமண காலத் தாரியர் எழுதி வைத்தனர். அவர் இத்துணை இழிவுபடுத்தி எழுதி வைத்ததனை ஆராய்ந்து பார்க்கமாட்டாத இஞ்ஞான்றைத் தமிழர்களும் பிதுரருலகு தென்றிசைக்கண் உளதென்னும் அவருரையைத் தழுவி, அதற்கியைய ஒழுகலாயினர் கண்டீர்! இங்ஙனந் தென்றிசைக்கண் உறைவார் 'பிதுரர்' என்று கூறிய ஆரியர்க்கு, அவரை அயன்படைப்பான தேவர் என்று மாற்றிச் சொல்வதற்கு மனம் ஒருப்படுமோ? ஒருப்படாதன்றே. ஆனதனாற்றான், சதபதபிராமணத்தின்கண் யாண்டும் 'பிதுரர்' தேவர் குழுவிற் சேர்த்துச் சொல்லப்படாமல், தேவர்களுறையும் வடதிசைக்கு எதிரான தென்றிசைக்கட் கூற்றுவனுலகில் உறைபவராகச் சொல்லப்பட்டனரென்க. ஆகவே, பரிமேலழகியார்உரைத்தவுரை ஆரியவேத நூலுக்கும், அதற்குரையாயெழுந்த சதபத பிராமணத்திற்கும் முற்றும் மாறுதல் கண்டுகொள்க.

அற்றேற், பரிமேலழகியார் 'பிதுரரை' அயன்படைப்பான கடவுட் சாதியென்றது எங்கிருந் தெடுத்ததெனிற் கூறுதும். வடமொழியில் இஞ்ஞான்று காணப்படும் புராணங்களிற் பெரும்பாலன, தென்னாட்டின்கண் உள்ள சைவர் வைணவர்களால் ஆக்கப்பட்டனவாகும். இச் சைவவைணவரிற் பெரும்பாலார் பண்டைத் தமிழரின் வழி வந்தவரே யல்லாமல் ஆரியரின் வழி வந்தவரல்லர். என்றாலும், ஆரியர் இந்நாட்டிற் குடிபுகுந்து இங்குள்ள அரசர்களையுஞ் செல்வர்களையுந் தம் வயப்படுத்தித் தம்முடைய ஆட்சியையும் முதன்மையையும் நாட்டவே, அவருடைய சிறு தெய்வ வணக்க வெறியாட்டு வேள்விகட்குச் சிறிதும் உடம்படாத சைவ வைணவர், ஆரியக் கோட்பாட்டை மறுத்துத் தாம் வணங்கிப் போந்த



சிவபிரான் வழிபாட்டையுந் திருமால் வழிபாட்டையும் நிலை நிறுத்துதற்கு, ஆரியர் கொணர்ந்த வடமொழியையே கருவியாய்க் கொண்டு புராணங்களும் ஆகமங்களும் இயற்றினர். இங்கு வந்த ஆரியர் தம்மை நிலத்தேவர் (பூசுரர்) என்றுந், தாம் வழங்கிய மொழியைத் தேவமொழி யென்றுஞ் சொல்லி இங்குள்ள அரசர்களையும் பிறரையும் நம்பச்செய்து, இங்கு எவர்க்குமில்லாத ஒரு பெருஞ் சிறப்பையும் ஒரு பெரும் பாராட்டையுந் தமக்கு உண்டாக்கிக் கொண்டமையினாலே, அவர்களுடைய கோட்பாடுகளை மறுத்துத் தம்முடைய கோட்பாடுகளை நிலைநிறுத்தவேண்டிய இன்றியமையாமையினையும், அங்ஙனஞ் செய்வது தமிழிலன்றி அவர்சிறந்தெடுத்துப் பாராட்ட வைத்த தேவமொழி யென்னும் வடமொழியின்கட் செய்யவேண்டிய இன்றியமையா மையினையும், அங்ஙனம் அதன்கட் செய்வதூஉம் மக்களாகிய தம் பெயராற் செய்யப்படின் ஆரியராலும் அவர் வயப்பட்டாராலுங் கைக்கொள்ளப்படாதாகலின் தம் பெயரை மறைத்துக் கடவுட் பெயரால் அமைக்க வேண்டும் இன்றியமையா மையினையும் நன்குணர்ந்த சைவவைணவர் தத்தந் தெய்வங்களே அப்புராணங்களையும் ஆகமங்களையும் வடமொழியில் ஆக்கலாயினவெனா அவற்றில் வரைந்து வைத்தனர். இவ்வடமொழி நூல்களெல்லாந் தமிழ் நாட்டிலுள்ளவர்களாலே இற்றைக்குத் தொள்ளாயிர ஆண்டுகளுக்கு முன்னே தொட்டு நெடுக ஆக்கப்பட்டு வந்தமைக்குச் சான்றுகளும அந்நூல்களின் பிறவரலாறுகளும் எமது மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் என்னும் பெருநூலில் விரித்து விளக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு புராணங்களும் ஆகமங்களும் வடமொழியில் எழுதப்பட்ட பிற்காலத்திலே தான் தென்புலத்து மூதாதையரான பிதுரர்களுந் தேவர்களாக உயர்த்தி நம் தமிழர்களால் எழுதி வைக்கப்பட்டார்கள். ஆரியர்கள் தமிழரை அசுரர்களென்றும், அவருறையுந் தென்றிசையைக் கூற்றுவனுலகென்றும், அதன்கண் இருந்து இறந்துபட்ட மூதாதையரை அக்கூற்றுவனுலகு சென்று வைகும் பிதுரரென்றும் இழித்துக் கூறினராகலின் அவ் இழிவை மாற்றவே, புராண ஆகமங்களெழுதிய தமிழக்குருக்கண்மார் அவரை அயன்படைப்பான கடவுட் சாதி யென்று அந்நூல்களில் வரைந்து வைத்தாராகல் வேண்டும். அதனைத் தழுவியே பரிமேலழகியாரும் அவரைக் கடவுட்சாதி யென்று எழுதி விட்டாரென்க.

முற்செய்த நூல் இது, பிற்செய்த நூல் இதுவென்று வரலாற்று முறையில் நின்று ஆராய்ந்துபாராமையினாலேயே தமிழ் ஆரியம் முதலான மொழிகளை நன்கு கற்றவர்களும் நூல்களின் உண்மையும் நூலாசிரியர் கருத்தும் உணராராய்ப் பழையவற்றைப் புதியவாகவும் புதியவற்றைப் பழையவாகவும் மயங்கக்கொண்டு, உண்மையைப் பொய்யாகவும் பொய்யை உண்மையாகவும் நம்பிப் பெரிதும் பிழைபடுகின்றார். அதுவேயுமன்றி, ஆரிய மொழி நூல்களில் எஃது எங்ஙனம் எழுதப்பட்டிருந்தாலும் அதனை அங்ஙனமே நம்பி அறியாமையில் அமிழ்ந்திக் கிடப்பதும் நம்மனோர்க்குள் வேரூன்றிய வழக்கமாய்விட்டது. அதுவல்லாமலும், ஆரியர் தமிழர்க்குச்

செய்து போந்த தீமைகளை எடுத்துச் சொல்லி, இனித்தமிழர் அத்தீமைகளினின்றும் விலகி முன்னேற்றமடைதற்குரிய வழி வகைகளைக் காட்டினால் அதனையுங் குற்றமாகச் சொல்வார் தந் நலம் பாராட்டுந் தமிழரிற் பலர் உளராகலின், அவராலும் ஆராய்ச்சியறிவு தடைப்படுகின்றது. என்றாலுந், தென்புலத்தில் மிக்க நாகரிகமுடையராயிருந்து காலஞ்சென்ற தம் மூதாதையர் அனைவரையும் ஒருங்குசேர்த்து நினைந்து, அவர்க்கு மேன்மேல் நலம் அருள்கவென்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நன்றிக்கடன் செலுத்துவதே, அம்மூதாதையர் வழிவந்த தமிழ் மக்களாகிய நமக்கு உரியதாமென்பதூஉம், அதனையே பண்டைத் தமிழ்ச் சான்றோராகிய தொல்காப்பியனாரும் அவர்வழி பிழையாது வந்த தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும் அருளிய செந்தமிழ்ப்பாட்டுகள் அறிவுறுத்துகின்றனவென்பதூஉம், நம் தமிழ் மக்கட் குரித்தல்லாத பிதுரர் வழிபாட்டைத் "தென்புலத்தார் தெய்வம்" என்னுந் திருக்குறளுக்கு ஏற்றிச் சொல்லிய பரிமேலழகியாருரை கொள்ளற்பாலதன்றென்பதூஉம் இவ்வாராய்ச்சிக் கட்டுரையின்கண் எடுத்துக் காட்டி நம் மக்களை மெய்ந்நெறியில் உயர்த்தல் இன்றியமையாததாதல் காண்க.

[குறிப்பு :—தென்புலத்தார் வழிபாட்டின் அவசியத்தையும் மேன்மையையும் உயர் திரு-மறைமலையடிகள் ஒப்புக்கொள்வதும்,பரிமேலழகர் உரை தமிழ்நாட்டில் வழங்கும் புராணங்கள் முதலியவற்றிற்குப் பொருத்தமாகவுள்ளதென்று அடிகள் விளக்குவதும், சரித்திர ஆராய்ச்சிமுறையில் நம்பிக்கையில்லாத வைதிகச் சைவர்கட்கும் மகிழ்ச்சியை விளைவிக்குமென்பதில் ஐயமில்லை. இக்கட்டுரையில் அடிகள் கூறும் பல பொருள்கள் மேற்கூறிய வைதிகச் சைவர்கட்கு உடன்பாடில்லையென்பது கால் நூற்றாண்டாகத் தமிழ்நாடறிந்ததொன்று. இதை நோக்க,

" While the tired waves vainly breaking
Seem here no painful inch to gain
Far back, through creeks and inlets [making
Comes silent, flooding in, the main."

என்ற ஆங்கிலப்பாட்டு நமது நினைவுக்கு வருகிறது. மிக விரிவாக இப்பொருள்பற்றி ஆராய்ச்சி செய்து இக்கட்டுரை வரைந்ததற்காக உயர்திரு - அடிகளுக்கு நமது நன்றியை மிக மகிழ்ச்சியோடு செலுத்துகின்றோம்.—பத்திராசிரியர்.]

# முருகன் நுண்மாண்

## (Esoteric Murugan)

[தி. கு. கி. நாராயணசாமி] உரிமை பதிவு செய்யப்பட்டது

(மலர் 4 – இதழ் 7 – 175-ம் பக்கத் தொடர்ச்சி)

### பெயர்

"• • • • மெய்மை குன்றா
மொழிக்குத் துணைமுருகாவெனும் நாமங்கள்"
—அருணகிரி.

முருகன் பெயரும் பொருளும் வருமாறு:—கந்தன் - சேர்க்கப்பட்டவன், சத்துருக்களையழிப்பவன்; முருகன் - தெய்வத்தன்மையுடையவன், இளமையுடையவன்; வேள் - விரும்பப் படுபவன்; சாமி - எல்லா முடையவன்; குகன் - காப்பவன், இரகசியமானவன்; கார்த்திகேயன் - கார்த்திகைகளின் புத்திரன்; சரவணபவன் - சரவணவாவியிற் பிறந்தவன்; கடம்பன் - கடம்ப



மாலை தரித்தவன்; விசாகன் - விசாக நாளிற் பிறந்தவன்; காங்கேயன் - கங்கையின் புத்திரன்; குமரன் - அருவருப்புகளை யழிப்பவன்; என்று மிளமையுடையவன்; இன்னபிற பெயர்கள் வந்தமைக்குக் காரணங்கள் கருதற்பாலது.

" ஈங்கன மதகண்ணி னெய்திய
குமரன் கங்கை
தாங்கினள் கொண்டு சென்று
சரவணத் திடுதலாலே
காங்கேய னெனப்பேர் பெற்றான்
காமர்பூஞ் சரவ ணத்தின்
பாங்கரின் வருதலாலே சரவண
பவனென் றானான்."

" தாயென வாரல்போந்து தனங்கொள்
பாலருத்த லாலே
ஆயதோர் கார்த்திகேய னென்றொரு
தோல்பேர் பெற்றான்
சேயவன் வடிவமாறுந் திரட்டிநீ
யொன்றாய்ச் செய்தாய்
ஆயத னாலேகந்த னுமெனு
நாமம் பெற்றான்."
(உற்ப. திருவிளை. 16-17.)

அவனது நாமங்கள் அனைத்தையும் தொகுத்த தொகுப்புகள் தோத்திர நூல்களில் செறிந்து கிடக்கின்றன. எடுத்துக்காட்டாகச் செந்தூர் அகவல் கூறுவது காண்க.

"முருகன் குமரன் மூவிரு முகன்மான்
மருகன் சிவன்அருள் மைந்தன் கந்தன்
மலைமகள் பாலன் வயங்கிளர் வேலன்
கலைபயில் புலவன் கார்த்தி கேயன்
வளையொரு மருப்பு வாரண முகவற்
கிளையவன் குகன்மயி லேறும் பெருமான்
சூர சங்காரன் சுப்பிர மணியன்
வீரருள் வீரன் விரைகமழ் கடம்பன்
சேந்தன் வள்ளி தெய்வ யானை
காந்தன் செவ்வேள் காங்கேயன் சிலம்பன்
ஆயிர நாமத் தையன் துய்யன்
சேயருட் கோமான் சேவற் றுவசன்"

வடமொழி மறை முடிவு! சுப்ரமண்ய ஓம், சுப்ரமண்ய ஓம், சுப்ரமண்ய ஓம்; என்று முருகனை மும்முறைபோற்றி யிருந்தல் காண்க. இதனைக் காஞ்சி புராணம்,

" எக்கலைக்கும் பூதங்க ளெவற்றினுக்கும்
பிரமனுக்கு மீச னென்னத்
தக்கமுதல் பரப்பிரமஞ் சதாசிவ
னேமென வேதஞ்சாற்று மல்லான்
முக்கனல்சூழ்
வேள்வியிற் சுப்பிரமணிய
னேமெனவு முக்காற் கூறும் "

என சிறப்பித்தல் சிந்திக்கப்பாலது.

நாமம் பல விருப்பினும் சிறப்பாக முருகனென நந்தண்டமிழிலும் ஸ்கந்தனென வடமொழியிலும் வழங்கும். முருகனிலுள்ள முருகு ஒரு பெயர்ச் சொல்பண்புப் பெயர், அது அன்விகுதிப்புணர்ந்து முருகையுடையவன் முருகனென ஆயிற்று. அன்றும் இன்றும் இனியும் கடவுளுக்கு காணப்படும் இலக்கணங்களைக் குறிக்கும் பண்புப் பெயரே முருகு ஆகும். இறை இலக்கணம் அனைத்தையும் அமையப்பெற்றவன் என்ற பொருளில் முருகன் நிற்கிறது.

" விரிகடல் வியல் தானை யோடு
முருகு உறழலை சென்று "
(மதுரைக்காஞ்சி 180)

இதற்கு உரை வகுத்த புலவர் நச்சும் நச்சினார்க்கினியர், முருகு உறழதலை சென்று முருகன் பகைவர் மேற் செல்லுமாறுபோலத் தடையறப் பகைவரிடத்தே சென்று, முருகு-தெய்வத் தன்மை; ஆகு பெயராய் நின்றது " என்றனர். மற்றும் நிகண்டு, முருகு இளமை, நாற்றம், முருகவேள், விழா, வனப்பாம் எனக் கூறுகிறது. இயற்கை மணமும், மாறா இளமையும், கடவுட்

டன்மையும், அழியா அழகும், அறிவிற் சிறந்த எச்சமபத்தவருங் கொள்ளும் ஆண்டவனுக்குரிய இயல்புகளாம். இவ்வியல்புகள் அமைந்த ஒன்றைத் தமிழ் மக்கள் முருகன் என்று வழுத்துகிறார்கள். இவற்றான் முருகன் சமஷ்டி (எல்லாம் சேர்ந்த (eclectic) தெய்வமென்பது தெளிவு. (வியஷ்டி தனித்தனி பிரிந்தது) இதன் விரிவு பின் பகுதியில்விளங்கும். இனித்தொழில் உருவத்தினின்று தெளிதலின் செவ்வேள் சிறப்பை ஸ்கந்த புவனத்தில் நின்று காண்பாம்.

“ முருகாவென உனையோதுந்
தவத்தினர் மூதலகில்
அருகாத செல்வமடைவார்
வியாதியடைந்து நையார்
ஒருகாலமுந் துன்பமெய்தார்
பாகதி யுற்றிடுவார்
பொருகால னுடுபுகார்
சமராபுரிப் புண்ணியனே ”

“ தேறுமுக மின்றித்
திரிந்தேமை யாளவன்றோ
ஆறுமுகம் கொண்டே
யவதரித்தான் எம்பெருமான் ”

இறைவன் உருவம் நால்வகைத்தது. அவை அங்கம் பிரத்தியங்கம் சாங்கம் உபாங்க மென்பன.

அங்கம் - சிரசு, முகம், இருதயம் 3. பிரத்தியங்கம் - மார்பு, கழுத்து, முலே, தோள், கொப்பூழ், மறைவிடம், வயிறு, கண், மூக்கு, செவி, கை, தாள், விரல், தொடை, முழுந்தாள், கணைக்கால் 16.

**சாங்கம்**:—(குணரூபமென்பது, அங்கத்துடன் கூடிய வகுப்புகள்,)

குணத்திரயம்—திரிசூலம்.
சத்தியம்—பரசு.
பிரதாபம்—வாள்.
தாசபேத்தியம்—வச்சிரம்.
அனுக்கிரகம்—அபயம்.
ருத்தியாதி சுத்தமாயை—கேடகம்.
அசேதமாயை—பாசம்.
விவர்ணம்—அங்குசம்.
சத்த நாதம்—மணி.
பாசசங்காரம்—அக்கினி. (10)

**உபாங்கம்** :—(அவனை விட்டு நீங்காமற் சமீபத்திலிருப்பது) கலை, புரிநூல், மாலை, சந்தம், நகை, இருக்கை, ஆவரணம். (7) இதன் விரிவை வாதுளம், “அங்க, பிரத்யங்க, ஸாங்கஞ்ச, உபாங்கஞ்ச” என்று ஆரம்பிக்கும் அடிகளில் காண்க. மற்றும் இப்பகுதியை சிவஞான சித்தியார் சுபக்கம் அறுவர் உரை 47-வது பாட்டில் பார்க்க.

சிவபெருமானுக்கு மகேச்சுர மூர்த்தங்கள் இருபத்தைந்து கூறப்படுதல் போல, முருகக்கடவுளுக்கும், ஞானசத்திதரர் கந்தர்தேவ சேநாபதி, சுப்பிரமணியர், கஜாரூடர், சரவணபவர், கார்த்திகேயர், குமாரர், சண்முகர், தாரகாந்தகர், சேநாபதி, பிரமசாத்தர், கல்யாணர், பாலசுப்பிரமணியர், கிரௌஞ்சத் துவஞ்சர், மயூரவாகனரெனப் பதினாறு மூர்த்தங்கள் குமார தந்திரம் கூறுகிறது :

அகத்தின் அழகு முகத்தில் தெரிதலின், அங்கத்தில் தலைசிறந்தது முகம். அம்முகங்களின் நுண்மாண்பு. சிலவருமாறு :

(1) உலகில் வேதத்தால் கூறும் **வைதிக சமயம் ஆறு**. அவை கடவுளை ஓங்கார வடிவினனை வழிபடும் **காணபத்தியம்** (கணபதி), பேரின்ப வடிவினனை வழிபடும் **கௌமாரம்** (குமரன்), பேரொளி வடிவினனை வழிபடும் **சௌரம்** (சூரியன்), எங்கும் நிறைந்தவனை வழிபடும் **வைணவம்** (விஷ்ணு), தாயாக வழிபடும் **சாக்தேயம்** (சக்தி), தந்தையாக வழிபடும் **சைவம்** (சிவன்) இவ்வைதிக சமயத்தின் ஆறு தெய்வத்தின் கூட்டே முருகனது ஆறுமுகம்.

**ஆறுசமயக் கடவுள் வேறுவே றின்றியான்**
**ஒருவனே** அங்கங்கிருந்து
அன்பர்க்கு முத்தி தருவித்தென் றியாவர்க்
**அறிவித்த வதனமணியே.** [தும்
(போரூர் பிள்ளைத்தமிழ் சிறுபறை 3)

**ஆறு திசையுஞ் சமயங்க**
**ளாறு மவுணர்களைக்**
**கீறும் வைவேற் பெருமான்**
**முகமாறுங் கிளத்தும்.** (9)

**எல்லாக் கடவுளுமோர் வடிவாகி**
**யிருந்தே செவ்வேள்** (98)
(ஆறெழுத்தலங்காரம்.)

**ஆறுசமயமுந் தன்முக**
**மாமென்**றறியு மன்பர்
வீறுசிந் தைக்கிடை
வீற்றிருக்குங் குகன். (98)
(மயிலலங்காரம் )

ஆகையால் முருகன் வழிபாட்டால் ஆறு தெய்வ வழிபாட்டின் பயனைப் பெறலாம்.

(2) எழுதாமறை நான்கு. அவற்றில் கையாளப்படுவது : இருக்கு, எசுர், சாமம் இவற்றின் இடையிலுள்ள எசுருக்கு 101 சாகைகள். அவற்றின் நடுவினது, 51-வதாகிய போதாயன சாகை. இது 7 காண்டமாக வகுக்கப்பட்டது. இதன் மத்தியிலுள்ளது 4-வதாகிய சதருத்திரிய காண்டம். இதன் நடுவிலிருக்கிற 5-வது பிரசனத்தின் இதயத்திலிருப்பது நமசிவாய என்னும் ஐந்தெழுத்து. இதனை “மும்மறையின் நடுமறையில் முனிவிலெழு காண்டத்தில்” என்ற சித்தாந்த சிகாமணி செய்யுளில் காண்க. முதன்மறையாகிய இருக்கின் முதல்பதம் அக்கினி. நடுமறையாகிய எசுரின் நடுச் சொல் சமுத்திரம். கடைமறையாகிய சாமத்தின் கடைக்கிளவி வாயு. முதல் வேதத்தின் முதலெழுத்தாகிய அகரமும் நடுவேதத்தின் நடுவெழுத்தாகிய உகரமும் கடைவேதத்தின் கடையெழுத்தாகிய மகரமும் சேர்ந்து ஓம் ஆயிற்று. அ+உ+ம்=ஓம், பாதம்+உதகம்=யாதோதகம் என்பதுபோல அ+உ=ஒ; ஒ+ம்=ஓம். இதிசமஷ்டி பிரணவம் அ, உ-ம் வியஷ்டிபிரணவம். ஐந்தெழுத்தும் பிரணவம் ஒன்றும் கூடிய ஆறும் முருகனுக்கு முகமாயிற்று. இதனை,

முகத்தி லொன்றதா **வவ்வெழுத்**
**துடையதோர் முருகன்**
**கைத்த முன்னெழுத் தினுக்கு**
**உரைபொருள் எனகவில**
மிகைத்த கண்களை விழித்தனன்
வெள்கினன் விக்கித்
திகைத்திருந்தனன் கண்டிலன்
அப்பொருள் திரனே.
(உற்ப. அயனைச் சிறை 10)

நன்முக மிருமூன் றுண்டால்
நமக்கவை தாமேகந்தன்
றன்முக மாகியுற்ற தாரகப்
பிரம மாகி
முன்மொழி கின், சுத்த
**மூவிரண் டெழுத்து மொன்ற**
**யுன்மக னுமத்தோரா**
**றெழுத்தெனவுற்ற வன்றே.**

**ஆதலின் நமதுசக்தி அறுமுக**
**மவனும் யாமும்**
**பேதகமன் றனம்**போற் பிரிவிலன்
யாண்டு நின்றான்
ஏதமில் குழவிபோல்வான் யாவையு
முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில்வீடும் போற்றினர்க்கு
அருள வல்லான்.
(உற்ப. திருவிளை. 18, 19)

(3) முருகன், இறைவனது மேல் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு.



187/88

கீழ்த்திசைகளை நிரலே நோக்கிய ஈசானம், தத்புருஷம், அகோரம், சத்தியோசாதம், வாமம், அதோமுகம் ஆகிய ஆறுமுடையவன்.

வந்திக்கு மலரோனாதி வானவர்
உரைத்தல் கேளாப்
புந்திக்குள் இடர் செய்யற்க
புதல்வனைத் தருதுமென்ன
வந்திக்கு நிகர்மெய் யண்ணல்
அருள்புரிக் தறிஞராயோர்
சிந்திக்குந் தனதுதோலைத் திருமுக
மாறுங் கொண்டான்.

(உற். அவ. 43)

"ஐந்து முகத்தோடு அதோமுகமுந் தந்து
திருமுகங்கள் ஆறாகி"

எனக் கலிவெண்பா கூறுதல் காண்க.

(4) அதோ முகத்திற்குப் பதிலாக அம்பிகை அல்லது மாயனது முகத்தை முகம் ஆறு என்பர். இஃதேயன்றி இறைவனது அனாதி மல முத்தத்துவம் முதலிய ஆறுகுணங்களே முருகனது முகமாக வந்ததை,

ஏவர்தம் பாலு மின்றி
எல்லைதீர் அமலற் குள்ள
மூவிரு குணனுஞ் சேய்க்கு
முகங்களாய் வந்த தென்னப்
பூவியல் சரவணத் தான்
பொய்கையில் வைகும் ஐயன்
ஆவிகள் அருளு மாற்றால்
அறுமுகங் கொண்டா னன்றே.

(உற்ப. திருவவ. 94)

இஃதேயன்றி முருகாற்றுப்படையும் கலிவெண்பாவும் இம்முகங்கள் பற்றி கூறுவது கவனிக்கற்பாலது. "கருணைகூர் முகங்களாறும்" உயிர்கட்குக் கருணை பொழிவதால் 'முகம் பொழி கருணைபோற்றி' என்றதும் உன்னற்பாலது.

"பேறுதரும் தெய்வம் யாவைக்கும்
யான்பெருந் தேவனென்றே
வீறுமுகம் கொண்டு போரூர்
முருகன் விளக்கியதே."

---

# திருஞானசம்பந்தரும், நல்லூர்ப்பெருமணமும்

[கி. குப்புச்சாமி முதலியார்]

"கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடலரே தொண்
நல்லூர்ப் பெருமண மேய நம்பானே" [டர்

(இதன் அந்வயம்.) நல்லூர்ப் பெருமண மேய நம்பானே, சொல்லூர்ப் பெருமணஞ் சூடலரே தொண்டர், கழுமலம் பல்லூர்ப்பெருமணம் பாட்டு மெய்யாய்த்தில, கல்லூர்ப் பெருமணம் வேண்டா - என்பதாம்.

(இதன் பொருள்.) நல்லூர்ப் பெருமணம் - நல்லூர்ப் பெருமண மென்னுந் தலத்தில், மேய - எழுந்தருளிய, நம்பானே - சிவபெருமானே, சொல் ஊர் - சொல்லளவாக நிற்கின்ற, பெருமணம் - பெரியதோர் மணத்தினை, தொண்டர் - சிவனடியாராகிய மெய்ஞ்ஞானிகள், சூடலர் - போற்றார், (இதனை) கழுமலம் - சீகாழிப் பதியிலுள்ளார், பல் ஊர் - பல துறையாகச் செல்லுகின்ற, பெருமணம் - பெரிய மணத்தைக் குறித்துக் கூறும், பாட்டு - வேதப் பாட்டுகளினது, மெய் - உண்மையினை, ஆய்த்தில - ஆராய்ந்தாரிலர், (ஆதலால்), கல்லூர், கல் லென்னும் ஓசைமிக்க, பெருமணம் - இப்போது நிகழ்ந்த பெருமணம், வேண்டா



அடியேனுக்கு வேண்டாம். (என்றவாறு.)

(இதன் கருத்து) நல்லூரில் எழுந்தருளிய பெரியோய்! பிறவி யென்னுங் கடலைத்தாண்டி உன் திருவடியென்னுங் கரை சேர விரும்புகின்ற தொண்டர், பிறவிகள் தோறும், தவவொழுக்கத்தைக் கொண்டு, ஞானமடைதற்கு நாடுவதே யன்றி, பெரியதோர் தொடக்காகிய மணத்தைப் போற்றிச் செய்து கொள்ளார். இவ்வுண்மையைக் கழுமலத்திலுள்ள வேதியர், வேதங்களை யெல்லாம், நன்றாக ஓதி யுணர்ந்திருந்தும், அவ்வேதங்களின் உண்மைப் பொருள் இதுவென ஆய்ந்திலராதலால், என்னை இம்மணத்திற்கு இசையச் செய்தனர். ஆயினும், பிறவிகள் தோறும், தேவரீர் திருவடி யென்னும் புணை கொண்டு நீந்தும் அடியேனுக்கு, இம்மணத்தாலுண்டாகும் தொடக்கு வேண்டுவதில்லை; தேவரீர் திருவடியே வேண்டுமென்பதாம். இக்கருத்துக்கள், இத்திருப்பாசுரத்துள், அமைந்து கிடப்பனவோ என்று ஐயுறுதிருப்பதற்கே நம் தெய்வச் சேக்கிழார் கீழ் வருஞ் செய்யுள்களை விதந்து கூறினார். அவை வருமாறு:—

"மற்றவர்த மொழிகேட்டு
மாதவத்தின் கொழுந்தனையார்
சுற்றமுறு பெரும்பாசத்
தொடர்ச்சிவிடு நிலைமையராய்ப்
பெற்றமுயர்த் தவாருள்முன்
பெற்றதினு லிசையாது
முற்றியதா யினுங்கூடா
தென்றவர்முன் மொழிந்தருள."

"ஆர்வ மிக்கெழு மன்பினான்
மலாய னனைய
சீர்ம றைத்தொழிற் சடங்குசெய்
திருத்துநூன் முனிவர்
பார்வ ழிப்பட வருமிரு
வினைகளின் பந்தச்
சார்பொ ழிப்பவர் திருக்கையிற்
காப்புநாண் சாத்த."

"அருப்புமென் முலையினார்த
மணிமலர்க் கைப்பிடித்தங்
கொருப்படு முடையபிள்ளை
யார்திரு வுள்ளந்தன்னில்
விருப்புறு மங்கியாவார்
விடையுயர்த் தவரேயென்று
திருப்பெரு மணத்தைமேவுஞ்
சிந்தையிற் றெளிந்துசெல்வார்."

"மந்திர முறையாலுய்த்த
வெரிவல மாகமாதர்
தந்திருக் கையைப்பற்றுந்
தாமரைச் செங்கையாளர்
இந்தவில் லொழுக்கம்வந்து
சூழ்ந்ததே யிவடன்னோடும்
அந்தமில் சிவன்றாள்சேர்வ
னென்னுமா தாவுபொங்க."

"சிவனமர்ந் தருளுஞ்செல்வத்
திருப்பெரு மணத்துளெய்தித்
தவநெறி வளர்க்கவந்தார்
தலைப்படுஞ் சார்புநோக்கிப்
பவமற வென்னைமுன்னா
ளாண்டவப் பண்புகூட
நவமலர்ப் பாதங்கூட்டு
மென்னுநல் லுணர்வுநல்க."

"காதன்மெய்ப் பதிநல்லூர்ப்
பெருமண மெடுத்துக்கண்டோர்
தீதுறுபிறவிப் பாசந்தீர்த்தல்செம்
பொருளாக் கொண்டு
நாதனே நல்லூர்மேவும்
பெருமண நம்பனேயுன்
பாதமெய்ந் நீழல்சேரும்
பருவமீ தென்றுபாட."

"வருமுறைப் பிறவிவெள்ளம்
வரம்புகா ணாதழுந்தி
யுருவெனுந் துயரக்கூட்டி
லுணர்வின்றி மயங்குவார்க

டிருமணத் துடன்சேவித்து
முன்செலுஞ் சிறப்பினலே
மருவிய பிறவிநீங்க
மன்னுசோ தியினுட்புக்கார். ''

இச்செய்யுள்களின் கருத்துக்கள் மனை வாழ்க்கையில் ஈடுபடாது, அத் தொடர்ச்சியை விட்டு, ஆண்டவன் திருவடியையே அவாவும் தவமுடையார் என்பதாயிற்று. இதனால்தான், இச்செய்யுள்களின்கடைசிச்செய்யுளும் துறவியினது பாசத்தைத் தீர்த்தலையே செம்பொருளாகக் கொண்டு யார்க்கும் நாதனும் நல்லூர்ப் பெருமண மேய பெம்மானே! தேவரீருடைய திருவடி-யாகிய நீங்கா நிழலைச் சேர்வதற்கு இதுவே சமயம் என்று பாடுவதாகக் குறிப்பதாயிற்று.

---

# சம்பந்தரும் சோதிடமும்—ஓர் வினு?

[இலக்கண விளக்க பரம்பரை சோமசுந்தர தேசிகர்]

சென்ற மாதச் சித்தாந்தத்தில் 'சம்பந்தரின் வானநூற் கல்வி' என்ற தலைப்பின்கீழ் 'சம்பந்தர் காலத்தில் வானசாஸ்திரக் கல்வியானது தற்காலத்தைவிட மேன்மையதாய், வளருவதாய், விருத்தி யடைவதாய், சோதிடத்தை யொரு பாகுபாடுடையதாய் இருந்ததென்பது திண்ணம். கோளறு திருப்பதிகத்தில் இரண்டாம் செய்யுள் பரணியைத் துருவனுகக் காட்டிக் கணக்கெடுப்பதும், சிலப்பதிகார காலத்தில் கிருத்திகை நட்சத்திரம் துருவனுயிருந்ததும் நாம் கவனிப்போமாயின் சம்பந்தர் கால நிர்ணயம் தற்கால ஆராய்ச்சியில் ஏற்பட்டது சரியாவென்று ஐயுறநேரும்' என்று எழுதப் பட்டுளது.

கோளறு பதிகத்தின் இரண்டாவது திருப்பாட்டு வருமாறு :—

" என்பொடு கொம்பொ டாமையிவை
மார்பிலங்க வெருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி
வந்தெனுளமே புகுந்த வதனல்
ஒன்பதோ டொன்றொடேழு பதினெட்டோ
டாறுமுடனுய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல வவைநல்ல
வடியாரவர்க்கு மிகவே.''

இதற்கு உரைகண்ட கயப்பாக்கம் சதாசிவச் செட்டியாரவர்கள் அகத்தியர் தேவாரத் திரட்டிலே 'ஒன்பது ஒன்பதாவது நாளும், ஒன்பதோடு ஒன்று-பத்தாவதுநாளும் ஒன்பதோடு ஏழு-பதினாறுவது நாளும், பதினெட்டு-பதினெட்டாவது நாளும், ஆறும்-ஆறுவது நாளும், உடனுய நாள்கள்-இவைகளோடு சேர்த்தெண்ணப்படும் நாள்களும், அவை அடியாரவர்க்கு நல்ல.... இத்திருப்பாட்டில் பிரயாணத்திற்கு ஆகாதனவாய நாட்கள் அடியார்க்கு நல்லனவென்பது கூறப்பட்டது. பிரயாணத்திற்கு ஆகாத நாட்கள் பரணி, கார்த்திகை, திருவாதிரை, ஆயிலியம், மகம், பூரம், சித்திரை, சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், பூரட்டாதி என்பனவாம். ஒன்பதாவது ஆயிலியம், பத்தாவது மகம், பதினாறுவது விசாகம், பதினெட்டாவது கேட்டை, ஆறுவது திருவாதிரை, உடனுய நாட்கள் பிற ஏழு நாட்கள். இவ்வாறன்றிப் பலபடி யெண்ணுவோர் எண்ணிய தெய்தாது இடர்ப்படுவரென்க' என்று எழுதுகிறார்.

" போக்கினிற் பரணியாரலா
திரைபூர மூன்றுங்
தீக்குமாயி லியங்கேட்டை
சித்திரை விசாகஞ்சோதி



யாக்கிய மகமிருத்தை
யாதியட்டமியு மாக்கன்
நீக்கிடுமெருக்கன் சேய்மால்
நிலையோரை நினைக்கலாகா.''

என்றும்,

" பாம்பாதிரை முற்றில்கேட்டை
பரணிமுப் பூரமாா
றீம்பான்முதற் சஷ்டியஷ்டமி
சேய்சனி சேரிருத்தை
சாம்பாலவிட்டி பகையான
நாள்களிற் றக்கவளி
போம்பாவி மீளாயமலோகஞ்
சென்று புகுமென்பரே.''

என்றும் சோதிடச் செய்யுள்கள் யாத்திரைக்காகாத நாட்களைக் குறிக்கின்றன. செட்டியாரவர்கள் உரைப்படி அசுவதிமுதலாக வைத்தெண்ண வேண்டும். அப்படி யெண்ணினுல் ஐந்து நாள்களே யகப்படுகின்றன. அசுவனியாதி கணனத்துக்கு முன் கிருத்திகாதி கணனமிருந்தது. அதனைக்கொண்டு சொல்ல வேண்டுமென்று யாழ்ப்பாணத்து முதலியார் சபாரத்தினமவர்கள் குறித்திருக்கின்றார்கள். இவைகளை விடுத்து ஸ்ரீமதி சொக்கம்மாள், B. A. L. T. கூறுகிறபடி பரணியைக்கொண்டு பார்ப்போமாறுல் ஒன்பது மகமும், ஒன்று பரணியும், ஏழு பூசமும், பதினெட்டு கேட்டையும், இருபத்து நான்கு சதயமுமாகும். முப்பூரம் கேட்டை ஆயிலியம் கார்த்திகை முதலிய நாள்களில் ஒன்றும் அகப்படாது. ஆகவே இதனை யாராய்ந்து எந்த நாளைத்துருவமாகச் சம்பந்தர் கொண்டார் என்பதை ஸ்ரீமதி சொக்கம்மாள் வெளியிடுதல் உலக உபகாரமாகும்.

---

# சம்பந்தரும் சோதிடமும்—விடை

[ஈ. த. சொக்கம்மாள், பி. ஏ., எல். டி.]

சம்பந்தரும் சோதிடமும் என்று வெளிவந்த பரிசோதனை காணப்பெற்றேன். காலஞ்சென்ற திருவாளர் கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் அவர்கள் பி. ஏ. தமிழிற்சிறந்த வித்வசிரோமணியாயும் சைவ சமயத்திற்கே ஒரு கண்ணுயுமிருந்தவர். அவர் உரை சிரமேற் கொள்ளற்பாலதே யாயினும், சம்பந்தர் கருத்து இதுதான் என முடிவிடக் கூடியவர் எக்காலத்திலுமிலர். ஏனெனில் அவர் கலைஞானத்தில் மூழ்கிய சித்திரக் கவியாதலால், அவர் சொற்றொடர்கள் பற்பல சொற்சித்திரங்கள் பொருந்தியனவாய்ப் பல பொருள் பயந்தும் அப்பொருள்கள் யாவையும் செவ்வனே பொருந்தியும் விளங்குவன. ஆதலால் ஷெசெட்டியார் அவர்கள் உரையை ஏலாது வேறு உரை கூறுவது குற்றம் அன்று எனத் துணிந்து எனது சிற்றறிவுக் கெட்டியதை விளக்கலாகு மெனத் துணிந்தேன். அவ்வாறு செய்யப்புகுவதன் முன்னர், 27 நட்சத்திரங்களையும் பரணி முதலாக வமைத்து, இலக்கங்களை நோக்குவோமாக :—

(1) பரணி, கிருத்திகை, ரோகணி, மிருகசீரடம், (5) திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், (10) பூரம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, (15) விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், (20) உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, (25) உத்திரட்டாதி, ரேவதி, அசுவனி.

என்னும் நட்சத்திர வரிசையையும் நிலையையும் கவனிக்க. இனி " ஒன்பதோ டொன்றொடேழு பதினெட்டோடாறு

முடனுய நாள்கள்'' என்னும் தொடர்மொழியை எவ்வெவ்வகைகளிற் பிரித்து உரைகூற இடங்கொடுக்குமென்பதை ஆய்வோமாக.

''ஒன்பதொடொன்று'' என்னும் பாகத்திற்கு மூவகையிலாகிலும் பொருள் கூறலாமன்றே? ஒன்பதோடொன்று என்பதற்கும் ஒன்பதும் ஒன்றும் ஆகப் பத்தாவது நட்சத்திரமான ''பூரம்'' என்று கொள்ளலாம். அல்லது ஒன்பதும் (அதாவது மகமும்) அதனுடன் ஒன்றும் (கோளங்களில் பொருந்தி யிருப்பதாகிய) ஆயில்யமும் என்றும் கூறலாம். அல்லது ஒன்பதாகிய மகமும், தன்னுடன் சேர்ந்த மற்றொன்றாகிய கிருத்திகை என்றுங் கொள்ளலாம். ''ஒன்பது,'' மகம் என்றும் ''ஒன்பதொடொன்று'' பூரம் என்று கொள்ளுங்கால் ''ஏழு'' என்பது ஏழு நட்சத்திரங்களாகக் காணப்படும் கிருத்திகை என்றும் கூறலாம். அல்லது ஒன்பது+ஒன்று+ஏழு என்று கூட்டிப்பார்க்கின், பதினேழாவது நட்சத்திரமாகிய கேட்டையில் முடியும். ''ஒன்பதொ - டொன்றொடேழு - பதினெட்டு'' என்னும் பாகத்தை, ஒன்பது, ஒன்றோடேழு, ஒன்றோடு பதினெட்டு எனவிரித்து ஒன்பது, எட்டு, பத்தொன்பது ஆகிய மகம், ஆயில்யம், பூராடம் என்றும் கொள்ளலாம். மற்றும் ''ஒன்பதொடொன்றொடேழு'' என்னும் சொற்றொடருக்கும் ஒன்பதாவதான மகத்தை ஒன்றாயெடுத்து ஏழாவதாகும் விசாகமெனினும் பொருந்தும். அல்லது ஒன்பதாவதான மகத்துடன் பொருந்தும் ஆயில்யத்தினின்று ஏழாவதாகிய சுவாதியெனினும் பொருந்தும். அல்லது ஒன்பதொடொன்று என்று கூறுமிடத்து ஒன்பதாவதான மகமும், முதலாவதான பரணியும் என்றும் எண்ணலாகும். பதினெட்டொடாறு என்பதற்கு இருபத்தினான்காவதான பூரட்டாதி யென்றும் பொருள் கூறலாம். இவ்வாறு பொருள் இதுவோ அதுவோ என்று காண்போர் மயங்கவும், எப்பொருளில் உரை கொள்ளினும், யாதொரு பழுதும் நேராதிருக்கவும் சித்திரம் பேசும் இச்செய்யுள் பிரயாணத்திற்கு ஆகாத நாள்களைப் பெரும்பாலும் இம்முறையிற் காட்டுவதாலும், இவ்வகையில் சம்பந்தர் பதிகங்களில் சில உளவாகையாலும், பரணியைத் தலையாக வைத்து எண்ணுவதற்கு இடங் கொடுப்பதாலும், காலஞ்சென்ற கனம் சதாசிவ செட்டியார் உரையை யான் ஆமோதிக்கக் கூடாமையா யிருப்பதற்கு வருந்துகின்றேன்.

---

# விநாயக சதுர்த்தி

[திருமயிலை [illegible]

[illegible]ளாறு.

கோளறு பதிகத்தின் இரண்டாவது திருப்பாட்டு வருமாறு :—

''என்பொடு கொம்பொ டாமையிவை
மார்பிலங்க வெருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி
வந்தெனுளமே புகுந்த வதனால்
ஒன்பதோ டொன்றொடேழு பதினெட்டோ
டாறுமுடனுய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல வவைநல்ல
வடியாரவர்க்கு மிகவே.''

[illegible], ஆயில்யம், [illegible], சித்திரை, சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், பூரட்டாதி என்பனவாம். ஒன்பதாவது ஆயிலியம், பத்தாவது மகம், பதினொருவது விசாகம், பதினெட்டாவது கேட்டை, ஆறுவது திருவாதிரை, உடனுய நாட்கள் பிற ஏழு நாட்கள். இவ்வாறன்றிப் பலபடி யெண்ணுவோர் எண்ணிய தெய்தாது இடர்ப்படுவரெங்க' என்று எழுதுகிறார்.

''போக்கினிற் பரணியாரலா
திரைபூர மூன்றுங்
கீழ்க்குமாயி லியங்கேட்டை
சித்திரை விசாகஞ்சோதி



[illegible]தும், அவரது ஒவ்வோர் அங்கங்களும் தத்துவங்களை உணர்த்தவே அமைந்துள்ளன என்பதும் விளங்கும். ஓரெழுத்தாகிய பிரணவத்துக்கு உரிய பொருள் மால், அயன் என்று சொல்லுகின்றனர். அது சரியன்று. 'எவனொருவன் பிரணவ ஸ்வரூபமான கொன்றை மலரை அணிகின்றானோ அவனே பிரணவத்திற்குரிய பொருள்'' என்று பெரியார் கூறுகின்றனர். ஸூத ஸம்ஹிதையில் (மு. அ. 5-24-வது சுலோகம்) பிரணவ மந்திரத்தை உபாஸிக்கும் முறை சொல்லுகையில், ''பரமாத்மாபித: சம்புர்தேவதா பரிகீர்த்தா'' பரமாத்மாவாகிய சிவபெருமானே பிரணவத்துக்குரிய கடவுள் என்று கூறப்பட்டிருக்கிறது. விநாயகரைப் பற்றிக் கூறும் புராணத்தில், ''பிரணவப் பொருளாயுள்ளான் பேரிடர் காத்தானன்றே.'' என்றும், ''தாரகத்தி னுருவானை'' என்றும், ''உருவமு மிடர்தீர்ப்பானுக் கோமெனு மொழியே யாமால்'' என்றும் கூறுகின்றமையாலும், பிரஹ்ம விஷ்ணுவாதியர் முழுமுதற் கடவுளாகார்; சிவபெருமான் ஒருவனே தனக்கு மேம்பட்ட கடவுளை உடையவனல்லனாகின்றான். ஆதலால் அவனே முழுமுதற் கடவுள் என்று ச்வேதாச்வதர உபநிடதத்தில் கூறப்பட்டிருக்கிறது. விநாயகர் என்ற சொல்லும் அக்கருத்தினையே குறிக்கின்றமையாலும், லிங்கபுராணத்தில [illegible]வார் ஸுரேச்வரம் வபுர்த சிரோமணியாயும் சைவ [illegible]கவ ஒரு கண்ணுயுமிருந்தவர். அவர் உரை சிரமேற் கொள்ளற்பாலதே யாயினும், சம்பந்தர் கருத்து இதுதான் என முடிவிடக் கூடியவர் எக்காலத்திலுமிலர். ஏனெனில் அவர் கலைஞானத்தில் மூழ்கிய சித்திரக் கவியாதலால், அவர் சொற்றொடர்கள் பற்பல சொற்சித்திரங்கள் பொருந்தியனவாய்ப் பல பொருள் பயந்தும் அப்பொருள்கள் யாவையும் செவ்வனே பொருந்தியும் விளங்குவன. ஆதலால் ஷைசெட்டியார் யாவது நம்மை வந்தடையட்டும் என்னும் பெருங்கருணையைக் காட்டுகின்றது. இதனை, ''மும்மலமாமதமுற்று'' என்னும் சிவஞானசுவாமிகள் பிள்ளைத் தமிழ்ச் செய்யுளாலறிக.

அவர், கழுத்துக்குக் கீழ் - மநுஷ்யாம்சமும் நான்கு புஜங்களினால் தேவாம்சமும், யானை முகத்தினால் - திர்யகம்சமும் உடையவரா யிருப்பதால் முத்தொழிலுக்குரியவர் விநாயகரே என்பதை விளக்குகின்றது. இதனை ''உயர்திணையு மஃறிணையும் படைத்தளித்துத் துடைக்கு முதலொருதானே என்றயர்வற எத்தகையோரும் அறிந்துய்ய'' - என்னும் பிரமாணத்தாலறிக.

அவர் வைத்திருக்கும் பாசாங்குசம் இரண்டும் தன்னைப் பந்தப்படுத்துபவரும், நடத்துபவரும் (ஆட்சிசெய்பவரும்) ஒருவருமிலர் என்பதைக்காட்டுவதால், தனக்கு மேம்பட்ட கடவுள் இல்லை என்பதை விளக்குகின்றது. இதனை, ''ஏர்கொண்ட தன்னைத் தளைப்பவரு மூருநருமிலரென்பதுலகுதேறக் கெடுத்தவெம் பாசமோ டங்குசந் தன் கரத்தேந்தி மததாரை சிதறி'' - என்னும் செய்யுளாலுணர்க.

அவர் கையிலிருக்கும் மோதகமானது, ஸகலவின்பங்கட்கும் இருப்பிடம் இறைவனே என்பதை விளக்குகின்றது. மோதகத்தைப் பற்றி இருக்கும் துதிக்கையானது இறைவன் ஆனந்த ஸ்வரூபன் என்பதைக் குறிக் [illegible] அவர் கையில் இருக்கும் நோக்குவோர்[illegible] .—

(1) பரணி, கிருத்திகை, ரோகணி, மிருகசீரடம், (5) திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், (10) பூரம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, (1[illegible]சாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், (20) உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, (25) உத்திரட்டாதி, ரேவதி, அசுவனி.

என்னும் நட்சத்திர வரிசையையும் நிலையையும் கவனிக்க. இனி ''ஒன்பதோடொன்றொடேழு பதினெட்டொடாறு

புலத்தத் தெரிவிக்கின்றது. விநாயகர் சிவபெருமானுக்குரிய முக்கண் செஞ்சடை முதலியனவும், அம்பிகைக்குரிய பாசம் அங்குசம் இவைகளையும் தரித்தலினால், இவர் சிவசத்தி ஸ்வரூபர் என்பதைக் காட்டுகின்றது. இதற்குப் பிரமாணம்,

"கங்கையும் பனிவெண் டிங்களும் விரைத்த
கடுக்கையந் தொங்கலு மரவுந்
தங்குபொற் சடையு முக்கணுந் தாதை
தானுவென் றுணர்த்தமென் மலர்க்கை
யங்குச பாச மணிந்துவெற் புயிர்த்த
வாரணங் கன்னையென் றுணர்த்தி
வெங்கலி முழுதுந் துமித்தருள் பட்டி
விநாயகன் சேவடி பணிவாம்."

இவ்விதமாகப் பல தத்துவங்களைப் புகட்டும் விநாயக மூர்த்தியை வழிபடுதற்குரிய பல விரத தினங்கள் இருப்பினும் ஆவணிமாதத்துச்சுக்லபக்ஷ சதுர்த்தி விரதமே மிகச் சிறந்ததாகும். முன்னொரு காலத்தில் கஜமுகன் என்னும் அசுரன் தான் பெற்ற வரப் பெருக்கினால் பிரமாதி தேவர்கட்குத் துன்பம் விளைவிக்க அத்துன்பத்தைச் சகியாத தேவர்களனைவரும் ஒருங்கு கூடித் திருக்கைலாயத்தை அடைந்து அங்கு நந்திகேச்வரரால் அநுமதிக்கப்பட்டு, சிவபெருமானிடம் சென்று தங்கள் குறைகளை முறையிட, வேண்டுபவர் வேண்டுவன வெல்லாமளிக்குவல்ல சிவபெருமானும் அதற்கு வேண்டிய பரிஹாரம்செய்து, உங்கள் குறைகளைத் தீர்க்கிறோம் என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டு, ஜகந்மாதாவாகிய உமாதேவியுடன் சிங்காரவனம் சென்று, அங்கு சித்திரமண்டபத்தில் வரையப்பட்டுள்ள மந்திர மயமான சித்திரங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவண், பிரணவமந்திரம் இரண்டு யானைகளைப்போல் எழுதியிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்த தேவியார் இறைவனைப் பார்த்து இஃதென்னென்று வினவ, எம்பெருமானும் இவ்விரண்டு யானைகளில் ஒன்று எனதுவடிவம்; மற்றொன்று நினது வடிவம் ஆதலால் பிரணவத்திற்குரிய பொருள் யாமே [illegible] அன்புடன் அச் சித்திரத்தை நோக்கினார்கள். உடனே அச்சித்திரத்தினின்றும் விநாயகப்பெருமான் அவதாரம் செய்தருளினார். "பிடியதனுருவுமை" என்னும் தேவாரத்தை நோக்குக. அங்ஙனம் தோன்றிய பிள்ளையார் தாய் தந்தையரை வணங்கி நிற்க, அவர்கள் கணபதிக்குப்பாசம் அங்குசம் முதலியவைகளை அருளித் "தேவாதி அனைவரும் என்னைப்போல உன்னையும் அருச்சிக்கக்கடவர்; நீ எமது கணங்கட்கெல்லாம் தலைவனாக இருக்கக் கடவாய்" என்று ஆஞ்ஞாபித்தார். அப்பதவியைப்பெற்ற விநாயகக் கடவுளும் தேவர்களின் வேண்டுகோளுக் கிணங்கி, கஜமுகனுடன் போர் புரிந்து, அவன் எந்த ஆயுதங்களினாலு மிறவாததுகண்டு, தமது கொம்பை ஒடித்தெறிய, அது சென்று அக்கொடியவனது மார்பைப் பிளந்து விட்டது. உடனே அவன் மூஷிக உரு வெடுத்துக்கொண்டு வந்தான். விநாயகர் அவன் வலியை அடக்கி வாகனமாகக்கொண்டு தேவர்களின் துயரை நீக்கியருளினார்.

அவர், திருவவதாரம் செய்த தினமே ஆவணி மாதச் சுக்லபக்ஷ சதுர்த்தியானபடியால் அத்தினத்தில் அவரைப் பூஜிப்பது மிகச் சிறந்ததாகும்.

"...இவ்வாறு தலைவர் அவதரித்தவைகல்
பந்தமறும் ஆவணித் திங்களின் வளரும்
சதுர்த்தியெனப் பகர்வர் அற்றால்
அந்தமதிச் சதுர்த்தியிற் பூசிப்பவருக்
குறுபயனர் அளக்கவல்லார்"

என்றும்,

"சிங்கமா மதியிடைச் சேர்முன்
பக்கத்துத் தங்கும் நற்சதுர்த்தி"

என்றும் விநாயக புராணங் கூறுவதாலுமுணர்க.

இத்தினத்தில் பிரமாதிதேவர்களனைவரும் விநாயகரைப் பூஜித்து இஷ்டசித்திகளைப் பெற்றிருக்கின்றனர். ஆதலால் நாமும் அம்மூர்த்தியை வைத்து நாடோறும் பூஜிக்க இயலாவிடினும் அவரது ஜன்மதினமான ஆவணிமாதத்துச் சுக்லபக்ஷ சதுர்த்தி யன்றேனும் பூஜித்துப் பேரின்ப மடைவோமாக,

18158

சைவசித்தாந்த மகா சமாஜத்தில் விற்பனையாகும்

# புத்தகங்களின் அட்டவணை

| | ரூ. | அ. |
|---|---|---|
| "சித்தாந்தம்" பைண்டு பிரதி (மலர் ௪, ௫, ௬. தனித்தனி) | 2 | 0 |
| சம்பந்தர் தேவாரம் (கலிக்கோ) ... ... ... | 1 | 0 |
| அப்பர் தேவாரம் (கலிக்கோ) ... ... ... | 0 | 12 |
| ஷை (ராப்பர்) ... ... ... | 0 | 10 |
| சுந்தரர் தேவாரம் ராப்பர் ... ... ... | 0 | 4 |
| உமாபதிசிவம் திருமுறைத்திரட்டு ... ... ... | 0 | 2 |
| இயற்கைத் தத்துவ நூலும் சைவசமயமும் ... ... | 0 | 2 |
| புலால் மறுத்தலுக்கு 50 காரணங்கள் ... ... | 0 | 2 |
| திருவெம்பாவைக் கருத்து ... ... ... | 0 | 2 |
| சைவமும் சுயமரியாதையும் ... ... ... | 0 | 2 |
| திருவிழாவின் அர்த்தம் (பத்துப் பிரதிகள்) ... ... | 0 | 2 |
| அறுபத்துமூவர் விளக்கம் ... ஷை ... ... | 0 | 2 |
| மயிர்முடிசேவை விளக்கம் ... ஷை ... ... | 0 | 3 |
| தேவாரம் விளக்கம் ... ... ஷை ... ... | 0 | 2 |
| சமயகுரவர் சம்பாஷணை ... ஷை ... ... | 0 | 2 |
| சந்தானகுரவர் வரலாறு ... ஷை ... ... | 0 | 2 |
| சைவசமயிகளுக்கு எச்சரிப்பு ஷை ... ... | 0 | 2 |
| கைவல்ய நவநீதம் (மூலமும் உரையும்) ... ... | 1 | 8 |
| சைவசிகாமணிகள் இருவர் ... ... ... | 1 | 0 |
| அன்பர் போற்றிக் கலிவெண்பா ... ... ... | 0 | 8 |
| ஏன் புலால் மறுத்தல் வேண்டும் ... ... ... | 0 | 6 |
| Superiority of Vegetarian Diet (ஆங்கிலத்தில்) | 0 | 8 |
| The philosophy of Vegetarianism ( ஷை ) | 0 | [illegible] |
| The Grace of Lord Siva ... ( ஷை ) | [illegible] | [illegible] |

தபாற்கூலி, பார்சல் செலவு, ரிஜிஸ்தர் செலவு முதலியன வேறு.

[illegible]

150, செவத்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி., சென்னை, 10-9-1931.

இங்ஙனம்:
ம. பாலசுப்பிரமணியம், காரியதரிசி.

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 4—No. 9.

# தேவாரம் - அடங்கன்முறை

சைவசித்தாந்த மகா சமாஜத்தினரால் வெளியிடப்பட்டுள்ள அடக்கவிலைச் சுத்தப்பதிப் புக்களாகிய சம்பந்தர் தேவாரம், அப்பர் தேவாரம், சுந்தரர் தேவாரம் மூன்றும் சேர்ந்ததே தேவாரம் - அடங்கன் முறை எனப்படும். இவ்வடங்கன்முறை கீழ்வரும் விலை விகிதப் படி கிடைக்கும்.

| | |
|---|---|
| சம்பந்தர் தேவாரம் (கலிக்கோ) | சம்பந்தர் தேவாரம் (கலிக்கோ) |
| அப்பர் தேவாரம் (கலிக்கோ) | அப்பர் தேவாரம் (ராப்பர்) |
| சுந்தரர் தேவாரம் (ராப்பர்) | சுந்தரர் தேவாரம் (ராப்பர்) |
| இம்மூன்றும் சேர்ந்தது. ரிஜிஸ் | இம்மூன்றும் சேர்ந்தது. ரிஜிஸ் |
| டர் தபாற் கூலியுட்பட ரூ. 2 14 0 | டர் தபாற் கூலியுட்பட ரூ. 2 11 0 |

இவைகளைப் பெறுவதற்கு மேற்கூறிய தொகைகளை முன் பணமாக மணியார்டர்மூலம் அனுப்பிவைக்க வேண்டும். அடங்கன் முறைப் பிரதிகள் பலவற்றைப் பெறவிரும்புவோர் கடிதங்கள்மூலம் விலை, பார்சல் செலவு முதலிய விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். சில பிரதிகளே அடங்கன்முறையாகத் தொகுத்து வைக்கப்பட்டுள்ளபடியால் இன்றே வாங்குவதற்கு ஒவ்வொருவரும் முந்துக.

## சம்பந்தர் தேவாரம்

ரிஜிஸ்தர் தபாற்கூலியுட்பட கலிகோ பிரதி ஒன்றின் விலை ரூபா 1—8—0.
வேண்டுவோர் முன்பணம் அனுப்பவேண்டும்.

பத்துப்பிரதிகள் வாங்குவோருக்கு ஒருபிரதி இனாமாகத் தரப்படும்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை. 10—9—1931

இங்ஙனம் :
ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.

## ஆறு புண்ணிய சீலர்கள் தேவை

திருவாசகம், திருச்சிற்றம்பலக் கோவை, திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் எட்டு ஒன்பது திருமுறைகளில் 2000 பிரதிகளை அடக்கவிலைச் சுத்தப்பதிப்பாக வெளியிடுதற்கு நூறு நூறு ரூபாய் தனித்தனியே முன்பணமாக உதவும் புண்ணிய சீலர்கள் அறுவர் தேவை.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை. 10—9—1931

இங்ஙனம் :
ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.

Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.